
# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி : 01 மே 2005 பார்வை : 09 விலை : ரூபா.25.00



உள்ளே....

தை. தனராஜ் ■ தொடர்பாடல் : வினைதிறன்மிக்க ஆசிரியர்க்கான அடிப்படைத் தேர்ச்சி
மா. கருணாநிதி ■ கற்றலுக்கான தலைமைத்துவம்
வி. தற்பரன் ■ சமுதாயக்கல்வி : அதிகரித்துவரும் தேவை
கா. செல்லப்பன் ■ விளையாட்டு முறையில் அயல் மொழிப் பயிற்சி
K. ஞானரெத்தினம் ■ மாணவர்களுக்கான இணைப்பாடவிதான போட்டி நடைமுறைகளில் மாற்றம் அவசியம்
சோ. சந்திரசேகரம் ■ உலகமயமாக்கமும் கல்வியும்

# அகவிழி

மாத இதழ்

ஆசிரியர்:
தெ.மதுசூதனன்

ஆசிரியர் குழு :
சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

நிர்வாக ஆசிரியர்:
மனோ இராஜசிங்கம்



ஆலோசகர் குழு :
பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சபா.ஜெயராசா
(கல்விப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
தலைவர், கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(தலைவர், கல்விப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
மா.செல்வராஜா
(தலைவர், கல்விப்பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்)
தை.தனராஜ்
(பணிப்பாளர், தமிழ்த்துறை,
தேசிய கல்வி நிறுவகம்)
உ.நவரட்ணம்
(பணிப்பாளர்,
ஆசிரியவாண்மை அபிவிருத்தி
நிலையம், தேசிய கல்வி நிறுவகம்)



அச்சு :
ரெக்னோ பிரின்ட், கொழும்பு - 06

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :
AHAVILI
49/1, Medawelikada Road, Rajagiriya.
Tel : 011-2869257
E-mail : ahaviliguru@yahoo.co.uk


## ஆசிரியரிடமிருந்து...

இலங்கையில் "கல்வி முறைமை" தோல்வி கண்ட ஓர் முறையாகவே இருந்து வருகிறது. இதனை 1970களுக்கு பின்னரான வரலாறு மேலும் துல்லியமாகவே வெளிப்படுத்துகிறது.

குறிப்பாக பாடசாலை அமைப்பு சமூகத்தின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு உதவவில்லை. மாறாக அவை இன முரண்பாடு அரசியலின் விசைப்படுத்தலுக்குத் துணைபோகும் விதத்திலேயே அமைந்துள்ளன. பல்லின சமூகங்களின் இடையேயுள்ள வித்தியாசங்களையும், தனித்துவங்களையும் அங்கீகரித்து வாழவும்; ஆட்சி அதிகாரங்களில் யாவரும் முழுமையாக பங்கு கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளையும் வழங்கக்கூடிய கல்வி முறைமை நடைமுறையில் இருக்கவில்லை.

அதாவது அரசியல் உளப்பாங்குகள், விழுமியங்கள், நடத்தைகள், சகிப்புணர்வு என்பவற்றை உருவாக்குவதில் கல்வியின் பங்கு இங்கு எதிர் மறையாகவே தொழிற்பட்டுள்ளது. அரசியல் அபிவிருத்தி சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்திக்கு அவசியமானது என்பதனை உணர்த்தும் வகையிலான கல்விச் செயற்பாடுகள் உருவாக்கப்படவில்லை.

இதற்கான பாட ஏற்பாடும், சித்தாந்தமும், கொள்கைத் திட்டமிடலும் கூட ஆட்சியாளர்கள் மத்தியில் இருக்கவில்லை. இதனால் பாடசாலைகள் சமூகமயமாக்கத்தின் ஆதாரத்தளமான மாற்றங்களுக்கு உதவவில்லை.

இதனால் இனங்களிடையே நிலைத்து நிற்கும் சமாதானச் சூழல் கூட பேணப்படவும் அரசியல்லமைப்புச் சிந்தனையிலும் அதன் ஏற்பாடுகளிலும் புதிய அம்சங்களைக் கொண்டு வந்து சேர்க்கவும் முடியாத "முரண்பாட்டுச் சுழல்" இறுக்கமாக இன்றுவரை தொடர்கிறது. இதற்கான நிலைமைகளும் சூழ்ந்துள்ளன.

ஆக இந்த நிலைமைகளை மாற்றியமைக்கும் கல்வியினூடாக நடைபெறும் "அரசியல் சமூக மயமார்க்கம்" நடைமுறையிலுள்ள கல்வி ஏற்பாடுகளில் வெளிப்படவில்லை. இதனாலேயே நாம் இன்னும் துயரப்படுவது நீடிக்கிறது. இது தவிர்க்க முடியாது போலும்...!

❑

# தொடர்பாடல் : வினைதிறன்மிக்க ஆசிரியர்க்கான அடிப்படைத் தேர்ச்சி

தை. தனராஜ்
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம

## அறிமுகம்

"......இவனுக்கு மரமண்டை, எது சொன்னாலும் ஏறாது; இந்த பிள்ளைக்குத் தலையில் களிமண்; இவர்களுக்குப் படிப்பிப்பதை விட மரங்களுக்குப் படிப்பிக்கலாம்...."

இவையெல்லாம் "படிப்பித்து" களைத்துப்போன ஆசிரியர்களின் விரக்தியின் வெளிப்பாடுகள்; நமக்கு மிகவும் பரிச்சயமான சொற்பிரயோகங்களும் கூட. ஆசிரியர் மிகவும் சிரமம் எடுத்து கற்பிப்பதை மாணவர்கள் விளங்கிக் கொள்வதில்லை எனில் பிரச்சினை எங்குள்ளது? அதே நேரத்தில் "இந்த ஆசிரியர் படிப்பித்தாரென்றால் "நோட்ஸ்" பார்க்க வேண்டிய அவசியமில்லை; என்றென்றும் மறக்க முடியாது" எனவும் சில ஆசிரியர்களைப் பற்றி மாணவர்கள் சிலாகிப்பதையும் நாம் கேட்கிறோம். சில ஆசிரியர்களின் கற்பித்தலை விரும்புகின்ற மாணவர்கள் சிலருடைய கற்பித்தலை ஏன் வெறுக்கிறார்கள்?

வகுப்பறைச் செயன்முறை விளைதிறனுடன் அமைவதற்குதவும் மிக முக்கிய காரணிகளில் ஆசிரியரின் தொடர்பாடல் தேர்ச்சி மிகவும் முக்கியமானதாகும். தனது பாடத்தில் மிக உயர்ந்த விடயஞானம் கொண்டுள்ள ஆசிரியர் கூட தொடர்பாடல் திறன் குறைந்தவராக இருப்பின் அவரால் விளைதிறன் மிக்க ஆசிரியராக விருத்தியடைவது சிரமமானது.

இக்கட்டுரையானது தொடர்பாடலின் அடிப்படை அம்சங்களையும் ஆசிரியரின் விளைதிறன் மேம்பாட்டுக்கு அதன் முக்கியத்துவத்தையும் விளக்க முயல்கிறது.

> தொடர்பாடல் என்பது *Communication* என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவமாகும். இச் சொல்லின் வினைவடிவமான *Communicate* என்பது *Communicare* என்னும் லத்தீன் சொல்லை அடியாகக் கொண்டது. அதன் பொருள் "கொடுத்தல்", "பகிர்ந்து கொள்ளல்" என்பதாகும். எனவே இன்றைய பயன்பாட்டில் தொடர்பாடல் என்பது "தகவல்களையும் கருத்துகளையும் கொடுத்தல் அல்லது பகிர்ந்து கொள்ளுதல்" என்னும் அர்த்தத்தைத் தருகிறது. தொடர்பாடல் என்பது சொல்லுதல், பேசுதல், கலந்துரையாடல், ஆலோசனை பெறுதல்

## தொடர்பாடல் என்றால் என்ன?

தொடர்பாடல் என்பது **Communication** என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவமாகும். இச் சொல்லின் வினைவடிவமான **Communicate** என்பது **Communicare** என்னும் லத்தீன் சொல்லை அடியாகக் கொண்டது. அதன் பொருள் "கொடுத்தல்" "பகிர்ந்து கொள்ளல்" என்பதாகும். எனவே இன்றைய பயன்பாட்டில் தொடர்பாடல் என்பது "தகவல்களையும் கருத்துகளையும் கொடுத்தல் அல்லது பகிர்ந்து கொள்ளுதல்" என்னும் அர்த்தத்தைத் தருகிறது. தொடர்பாடல் என்பது சொல்லுதல், பேசுதல், கலந்துரையாடல், ஆலோசனை பெறுதல் என விரிந்த பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது.

தொடர்பாடலுக்கு நிறையவே வரைவிலக்கணங்கள் உள்ளன:

* ஓர் ஆள் இன்னுமொரு ஆளுக்குத் தகவல்களை கடத்துகின்ற செயன்முறை
* தகவல்கள், கருத்துக்கள், சிந்தனைகள், உணர்வுகள், விழுமியங்கள் ஆகியவற்றை கடத்துவதன் மூலம் பிறரை அடைதல்;
* பெறுநரின் நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்ற செய்தி;
* இரு ஆட்களுக்கிடையே தொடர்புகளைக் ஏற்படுத்துகின்ற பாலம்

இவ்வாறு தொடர்பாடலுக்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் இருந்த-

போதும் "விளைதிறன்மிக்க தொடர்பாடல்" (Effective Communication) என்பது மிகவும் முக்கியமானது. தொடர்பாடல் ஏற்படுவதற்கு குறைந்த பட்சம் இரு ஆட்கள் அவசியம். தகவல்களை அனுப்புவதால் மாத்திரம் தொடர்பாடல் ஏற்பட்டுவிட முடியாது. அந்த தகவல் உரியமுறையில் மற்றவரால் பெறப்பட்டு விளங்கிக் கொள்ளப்பட்டால் மாத்திரமே தொடர்பாடல் ஏற்பட முடியும். எனவே தொடர்பாடல் என்பது ஒருவர் (அனுப்புபவர்) தகவலை அனுப்புவதில் மாத்திரமல்லாது அத் தகவல் பெறப்பட்டு விளங்கிக் கொள்ளப்படுவதிலேயே முழுமை பெறுகிறது."என்ன கருத்துடன் ஒரு செய்தி அனுப்பப்பட்டதோ கூடியவரையில் அதே கருத்துடன் அச்செய்தி பெறப்படுவதையே நாம் விளைதிறன் மிக்க தொடர்பாடல்" என்கிறோம். எனவே தொடர்பாடலின் போது தகவல் அனுப்புபவர் தனது தகவல் உரியவாறு பெறப்பட்டு விளங்கிக் கொள்ளப்பட்டதா என்பதை உறுதி செய்து கொள்வது மிகவும் முக்கியமானது. விளைதிறன் மிக்க தொடர்பாளராக ஒருவர் மேம்படுவதற்கு இதுவே அடிப்படையாக அமைகிறது. துரதிர்ஷ்டவசமாக வகுப்பறைச் செயன் முறையில் தமது தகவல்கள் மாணவர்களால் விளங்கிக் கொள்ளப்படுவதை சில ஆசிரியர்கள் உறுதி செய்து கொள்வதில்லை. இதன் விளைவாக தாம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியாமல் அவர்கள் விரக்தி அடைகின்றனர்.

## தொடர்பாடலின் முக்கியத்துவம்

பாடசாலை உட்பட சகல ஒழுங்கமைப்புகளின் எல்லா செயற்பாடுகளிலும் தொடர்பாடல் செல்வாக்கு செலுத்துகிறது. சிறந்த தொடர்பாடல் கட்டமைப்புகள் இல்லாத ஒழுங்கமைப்புகள் விளைதிறன் உள்ளவையாக வளர முடியாது. ஒழுங்கமைப்பின் உறுப்பினர்கள் தமது தேவைகளையும், கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கான தொடர்பாடல் வாய்ப்புகள் கட்டமைக்கப்பட வேண்டும்.

பாடசாலை என்னும் ஒழுங்கமைப்பில் பணிபுரியும் நபர்கள் ஒருவரோடொருவர் ஒத்துழைக்க வேண்டும்; தமது கருத்துக்களை பரப்ப வேண்டுமெனில் மற்றவர்களை முதலில் ஈர்க்கவேண்டும்; பிறரது கருத்துக்களை உயிர்ப்புடன் செவிமடுக்க வேண்டும்; தமது அபிப்பிராயங்களுக்கு பிறரை இணங்கச் செய்ய வேண்டும்; தமதும் பிறரதும் பணிகளை ஒழுங்குபடுத்திக் கொண்டு அவற்றை கட்டுப்படுத்தவும் வேண்டும். இவை யாவற்றுக்கும் விளைதிறன் மிக்க தொடர்பாடல் மிகவும் அவசியமானது.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் பணி வெறுமனே கற்பித்தலோடு நின்றுவிடுவதில்லை. மாணவர்களை முழுமையான மனிதர்களாக உருவாக்கும் பெரும் பணியும் ஆசிரியர்கள் கைகளில் தான் உள்ளது. அதற்கு அவர்கள் மாணவர்களை விளங்கிக் கொள்ள வேண்டும். மாணவர்களின் பிரச்சினைகளுக்கான மூலங்களை அறிந்து கொள்ள வேண்டும். பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகளை முன்வைப்பதற்கு சாதகமான உறவு நிலைகளையும், தளத்தையும் கட்டி எழுப்புதல் வேண்டும். தமது முயற்சிகள் மாணவர்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை நுணுக்கமாக மதிப்பீடு செய்து ஏற்ற பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவை யாவும் ஆசிரியருக்கும் மாணவர்க்கும் இடையில் விளைதிறன்மிக்க தொடர்பாடல் முறைமை ஒன்றினை கட்டி எழுப்புவதினால் மாத்திரமே சாத்தியமாகும்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் பணி வெறுமனே கற்பித்தலோடு நின்று விடுவதில்லை. மாணவர்களை முழுமையான மனிதர்களாக உருவாக்கும் பெரும் பணியும் ஆசிரியர்கள் கைகளில் தான் உள்ளது. அதற்கு அவர்கள் மாணவர்களை விளங்கிக் கொள்ள வேண்டும். மாணவர்களின் பிரச்சினைகளுக்கான மூலங்களை அறிந்து கொள்ள வேண்டும். பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகளை முன் வைப்பதற்கு சாதகமான உறவு நிலைகளையும், தளத்தையும் கட்டி எழுப்புதல் வேண்டும். தமது முயற்சிகள் மாணவர்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை நுணுக்கமாக மதிப்பீடு செய்து ஏற்ற பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவை யாவும் ஆசிரியருக்கும் மாணவர்க்கும் இடையில் விளைதிறன்மிக்க தொடர்பாடல் முறைமை ஒன்றினை கட்டி எழுப்புவதினால் மாத்திரமே சாத்தியமாகும்.

## தொடர்பாடற் செயன்முறை


இருவழி தொடர்பாடற் செயன்முறை எவ்வாறு நடைபெறுகிறது என்பதை வரைபடம் 1 காட்டுகின்றது:

ஓர் ஆள் (Sender) ஒரு தகவல், கருத்து அல்லது அபிப்பிராயத்தை இன்னொருவருக்கு (Receiver) அனுப்ப எத்தனிக்கும்போது தொடர்பாடற் செயன்முறை தோற்றம் பெறுகிறது. செய்தியை அனுப்புவதற்கு சொற்களோ, சைகைகளோ அல்லது வேறு ஏதேனும் நவீன தொழின்முறையியலோ பயன்படுத்தப்படலாம்.

இத்தொடர்பாடற் செயன்முறையில் பின்வரும் செயற்பாடுகள் அடங்கியுள்ளன:

***1. கருத்துருவாக்கம்:*** கருத்துருவாக்கமே தொடர்பாடற் செயன்முறையில் முதலாவது கட்டம். இங்கு ஒரு நபர் ஏதேனும் ஒரு செய்தியை இன்னொருவருக்கு அனுப்புவதற்கான கருத்துருவாக்கத்தைப் பெறுகிறார்.

***2. மறைப்படுத்தல் (Encode):*** இக்கட்டத்தில் செய்தியை உருவாக்கியவர் அதனை அனுப்பக்கூடிய வகையில் சொற்களாகவோ படங்களாகவோ அல்லது வேறு ஏதேனும் சைகைகள், அடையாளங்களாகவோ மாற்றிக் கொள்கிறார்.



மூலம்: **Griffin, R.W (1997) Management, AITBS Publishers, New Delhi**

***3. கடத்துதல்:*** இது மூன்றாவது கட்டம் ஏற்கெனவே அனுப்பும் வடிவத்தில் மாற்றியமைக்கப்பட்ட செய்தி எழுத்து அல்லது சொல் அல்லது வேறு ஏதேனும் முறை மூலம் பெறுநருக்கு அனுப்பப்படுகிறது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் ஊடகம் தடையின்றி இருப்பது உறுதி செய்யப்படுகிறது. அத்துடன் அனுப்பும் காலம், நேரம் என்பவையும் தீர்மானிக்கப்படுகின்றன.

***4. மறை நீக்கல் (Decode):*** பெறப்பட்ட செய்தி இக்கட்டத்தில் மறைநீக்கல் செய்யப்படுகிறது. அதாவது அனுப்புவரினால் மறைப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட செய்தி மீண்டும் பெறுபவரினால் மறைநீக்கல் செய்யப்படுகிறது.

***5. கருத்துருவாக்கம்:*** மறை நீக்கப்பட்ட செய்தியின் கருத்தை பெறுபவர் புரிந்து கொள்கிறார். இக் கட்டத்தில் அனுப்பப்பட்ட செய்தியின் உள்ளடக்கத்தை அவ்வாறே புரிந்து கொள்வதில் பல சிக்கல்கள் ஏற்பட லாம். அதேநேரத்தில் பெறப்பட்ட செய்திக்கு பதிற்குறியும் (responce) அவரால் உருவாக்கப்படும்.

***6-8 திரும்பவும் மறைப்படுத்தல், கடத்துதல், பெறுதல்:*** செய்தி அனுப்பப்பட்ட அதே படிமுறைகள் கையாளப்பட்டு செய்தியைப் பெற்றவர் செய்தியை அனுப்பியவருக்கு பின்னூட்டல் வழங்குவார். இதன் மூலம் தொடர்பாடல் செயன்முறை தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

மேற்காட்டிய தொடர்பாடல் செயன்முறை தொலைபேசியில் நாம் தொடர்பு கொள்வதை ஒத்தது. தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போது இரைச்சல் **(Noise)** ஏற்படின் ஒருவர் பேசுவதை மற்றவர் விளங்கிக் கொள்ள முடியாது. அதைப் போலவே இருவழித் தொடர்பாடல் செயன்முறையின் பல்வேறு கட்டங்களிலும் "இரைச்சல்" ஏற்பட்டு தொடர்பாடல் முறிந்து போவதற்கு வாய்ப்புகள் உள்ளன. உதாரணமாக ஆசிரியர் கூறும் விளக்கம் மாணவரின் முன் அனுபவத்துக்கு ஏற்றதாக இல்லாவிட்டால் அது "இரைச்சல்" ஆகிவிடுகிறது. ஏனெனில் மாணவரால் ஆசிரியர் கூறுவதை விளங்கிக் கொள்ள முடியாமையினால் ஆசிரியர் எதிர்பார்க்கும் பின்னூட்டலை மாணவர்களால் வழங்க முடியாது போகலாம். இதனால் தொடர்பாடல் செயன்முறை முறிவடைகிறது.

"என்ன கருத்துடன் ஒரு செய்தி அனுப்பப்பட்டதோ கூடியவரையில் அதே கருத்துடன் அச்செய்தி பெறப்படுவதையே நாம் விளைதிறன் மிக்க தொடர்பாடல்" என்கிறோம். எனவே தொடர்பாடலின் போது தகவல் அனுப்புபவர் தனது தகவல் உரியவாறு பெறப்பட்டு விளங்கிக் கொள்ளப்பட்டதா என்பதை உறுதி செய்து கொள்வது மிகவும் முக்கிய மானது. விளைதிறன் மிக்க தொடர் பாளராக ஒருவர் மேம்படுவதற்கு இதுவே அடிப்படையாக அமை

## தொடர்பாடல் தடைகள்

தொடர்பாடல் செயன்முறையில் ஏற்படும் இரைச்சல்கள் அல்லது தடைகள் தொடர்பாடலை முற்றாக தடை செய்துவிடலாம்; அல்லது அதன் பகுதியைத் தடைசெய்துவிடலாம்; அல்லது அர்த்தத்தை திரிபுபடுத்தி விடலாம். இவ்வாறான தடைகள் மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன.

***தனியாள் தடைகள் (Personal barriers) :*** வேறுபட்ட மனவெழுச்சிகள், விழுமியங்கள் செவிமடுத்தல் குறைபாடுகள் போன்றவை இத்தகைய தனியாள் தடைகளாகும். ஒருவரது இனம், பால், சமூக பொருளாதார நிலை, கல்வி ஆகியவை இத்தடைகளுக்கு அடித்தளமாக அமைகின்றன.

ஆசிரியர் மீது மாணவர்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்படும் பட்சத்தில் அவர் கூறுவதை மாணவர்கள் ஆர்வத்துடன் உள்வாங்க மாட்டார்கள். அதேபோல மாணவர்களின் விழுமியங்கள், கலாசாரப் பின்னணி

முதலியவற்றை விளங்கிக் கொள்ளாமல் ஆசிரியர் தனது கருத்துக்களை முன்வைக்கும்போது அவை மாணவர்களால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஆசிரியர்கள் தனது மனவெழுச்சிகளை வெளிப்படையாகக் காட்டும் போதும் மாணவர்கள் ஆசிரியரிடமிருந்து தூர விலகி விடலாம்.

இதனை நாம் "உளவியற் தொலைவு" (Psychological Distance) என்கிறோம். ஒரே வகுப்பறையில் மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையில் இத்தகைய விலகி இருக்கும் நிலை ஏற்படுமாயின் அங்கு விளைதிறன்மிக்க தொடர்பாடலுக்கு இடமில்லை.

தொடர்பாடற் செயன்முறையில் எமது மனவெழுச்சிகளே புலக்காட்சி சாளரங்களாகத் தொழிற்படுகின்றன. நாம் பார்ப்பதும் கேட்பதும் எமது புலக்காட்சிகளாலேயே வழிப்படுத்தப்படுகின்றன. எனவே அனுப்புவரதும், பெறுநரதும் புலக்காட்சிகள் நெருங்கி இருக்கும்போது அவர்களுக்கிடையிலான தொடர்பாடலும் விளைதிறன் பெறுகின்றன.

ஆசிரிய கல்வியை முன்னேற்றுவதற்கு தொடருரு ஆசிரிய கல்வி வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும். பாடசாலைப் பாடத்திட்டத்தில் நிறைவு செய்யப்படாத தேவைகளை நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய துரித நிகழ்ச்சித்திட்டங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றது. பாடங்கள் சார்ந்த பற்றாக்குறைகள், ஆசிரிய பற்றாக்குறைகள், கல்வித் தொழில் நுட்ப நெருக்கடிகள், தொழில் தகைமை பிரச்சினைகள், சமத்துவம் ஐக்கியம், மனித உரிமை சமூக நியாயம் சார்ந்த பிரச்சனைகள் என்பன இதன் மூலம் நிவர்த்தி செய்யப்படும். ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஆசிரிய கல்வி நிறுவனங்கள் இவற்றிற்காக பயன்படுத்தப்படும்.

### பௌதீகத் தடைகள் (Physical barriers)

தொடர்பாடல் நடக்கின்ற சூழலில் ஏற்படுகின்ற திடீர் சத்தம், நபர்களுக்கிடையிலான தூரம், புலக்காட்சியை பாதிக்கும் அம்சங்கள் போன்றவை பௌதீகத் தடைகளாக அமைகின்றன.

இரு நபர்கள் வாய்மொழித் தொடர்பு கொள்ளும் போது அவர்களுக்கிடையிலான தூரம் முக்கியமானது. இவ்வாறான இடைவெளிகள் பற்றிய ஆய்வு "இட அணிமை" (Droxemics) எனப்படுகிறது. இத்தகைய ஆளிடைவெளி கலாசாரங்களுக்கிடையில் மாறுபடுகிறது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் நெருக்கமான நண்பர்கள் உரையாடும் போது அவர்களுக்கிடையிலான இடைவெளி சுமார் 6-18 அங்குலமாகும். தெரிந்தார்கள் உரையாடும்போது தமக்குள் 3-4 அடி இடைவெளியைக் கொண்டிருக்கின்றனர். அலுவலகத்தில் பணியாளர்கள் தொழில் ரீதியாக உரையாடும் போது 4-12 அடிவரை விலகி இருக்கின்றனர். முறைசார்ந்த பொது உரையாடல்கள் இன்னும் கூடிய இடைவெளியில் நடைபெறுகின்றன. லத்தீன் அமெரிக்க, ஆசிய நாடுகளில் தனிப்பட்ட உரையாடலில் கூடிய நெருக்கம் பேணப்படுகிறது.

இவ்வாறான கலாசார வேறுபாடுகளை ஆசிரியர் அறிந்து வைத்திருப்பது அவர் விளைதிறன் மிக்க தொடர்பாடல் கொள்ள மிகவும் உதவியாக இருக்கும். ஆசிரியர் மாணவர்களுடன் நெருக்கமாக நின்று உரையாடுவது சில பிரதேசங்களில் ஏற்க முடியாததாக இருக்கலாம்.

### சொற்பொருள் சார்ந்த தடைகள் (Semantic barriers)

நாம் மேற்கொள்கின்ற தொடர்பாடல் யாவுமே அடையாளங்களே (Symbols) ஆகும். சொற்கள், படங்கள், செயல்கள் ஆகியவை மூலமே நாம் தொடர்பாடல் செய்கிறோம். இவை மூன்றும் அடையாளங்களாகும். பல்வேறு கலாசாரங்களைச் சேர்ந்தோர் தொடர்பாடல் மேற்கொள்ளும் போது சொற்பொருள் சிக்கலைத் தோற்றுவிக்கிறது. சொற்களுக்கு வெளிப்படையான பொருள் ஒன்றாகவும் அது கூறப்படுகின்ற சூழமைவில் (Context) பொருள் வேறொன்றாகவும் இருக்கலாம். இது பற்றிய தெளிவின்மை விளைதிறன் மிக்க தொடர்பாடலுக்குத் தடையாக அமையும்.

சொற்கள்: தொடர்பாடலில் மிகப் பிரதானமான அடையாளமாகும். சொற்களுக்குப் பொதுவாக ஒரு பொருள் இருப்பதில்லை. தமிழில் "அடி" என்பதற்கு

**அட்டவணை 1:**

**எளிமையான எழுத்துக்கு வழிகாட்டல்கள்**

* எளிமையான, பரிச்சயமான சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தல்
* விளக்கப்படங்கள், அட்டவணைகளைப் பயன்படுத்தல்
* சிறு சிறு வசனங்கள், பந்திகளாக எழுதுதல்
* தேவையான சொற்களை மட்டும் பயன் படுத்துதல்
* தெளிவான கட்டமைப்பை பயன்படுத்தல் (தலைப்புகள், உபதலைப்புகள், அழுத்தம் தருவதற்கு அடிக்கோடிடல் முதலியவை பயனுள்ளவை)

*மூலம்: Newstorm, J.W and Davies, K. (1997) Organizational Behaviour, The Mcgraw-ttill Companies, Inc.*

### அட்டவணை 2: விளைதிறன் மிக்க செவிமடுத்தலுக்கான வழிகாட்டல்கள்

1. கதைப்பதை நிறுத்திக் கொள்ளுங்கள் நீங்கள் கதைத்தால் எப்படி செவிமடுக்க முடியும்?,
2. கதைப்பவரை ஆறுதலாகவும் ஒய்வாகவும் இருக்கச் செய்யுங்கள்
3. நீங்கள் உண்மையில் செவிமடுக்கிறீர்கள் என்பதை அவரை நம்பச் செய்யுங்கள். ஈடுபாடு காட்டுங்கள் அவரது கண்களை நோக்குங்கள் சொற்சாரா பதிற்குறிகளைக் காட்டுங்கள்
4. வேறு கவர்ச்சிகளை அகற்றிவிடுங்கள். மேசையில் தாளம் போடுதல் பத்திரிகையின் பக்கங்களை புரட்டுதல் பொருத்தமெனில் கதவை மூடிவிடுங்கள்
5. கதைப்பவருடன் ஒத்துணர்வு (empathy) கொள்ளுங்கள் அவரது அநுபவத்தின் ஊடே அவர் கூறுவதை. விளங்கிக் கொள்ள முயலுங்கள்.
6. பொறுமையாக இருங்கள். கதைப்பவருக்கு இடையூறு செய்யாதீர்கள் செவிமடுத்து நீங்கள் களைத்துப் போய்விட்டீர்கள் என்பதை அவருக்குக் காட்டி விடாதீர்கள்
7. உங்களது உணர்வுவினைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். கோபமுற்றால் அவர் கூறுவதன் அர்த்தம் உங்களுக்கு சரியாகப் புரியாது.
8. விவாதம் அல்லது விமர்சனத்தை தொடங்காதீர்கள். விமர்சனம் அவரது உணர்வினை கிளறக்கூடும்
9. பொருத்தமான கேள்விகளைக் கேளுங்கள். கேள்வி கேட்பது நீங்கள் கவனமாக செவிமடுக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்தும். அவர் மேலும் கதைப்பதற்கு ஊக்கப்படுத்தப்படுவார்.
10. கதைக்காதீர்கள். திரும்பவும் முதலாவது வழிகாட்டல் தான் நீங்கள் கதைத்தால் செவிமடுக்க முடியாது. எமக்கு இரு செவிகளும் ஒரு வாயும் இருப்பது நாம் கதைப்பதைவிட செவிமடுக்கவேண்டும் என்பதற்குத் தான். ஒரு காதில் அர்த்தத்தையும் மறு காதில் உணர்வினையும் செவிமடுங்கள். நீங்கள் கவனமாக செவிமடுக்காவிட்டால் சிறந்த தீர்மானங்களையும் உங்களால் மேற்கொள்ள முடியாது.

*மூலம்:* **Newstorm J.W. and Davis, K (1997) Organizational Behariour, The Mcgraw-Hill Companies, Inc.**

எத்தனை பொருள் உண்டு? ஆங்கிலத்தில் "round" என்னும் சொல்லுக்கு 110 அர்த்தங்கள் உள்ளனவாம்! எனவே ஒரு கலாசாரத்தில் "கௌரவமான" ஒரு சொல் இன்னொரு கலாசாரத்தில் "இழிவானதாக இருக்கலாம். அதேபோல வாசிக்கக்கூடிய தன்மை (readability) யும் தொடர்பாடலுக்கான ஒரு காரணியாகும்.

ஆசிரியர்கள் வகுப்பறையில் பேச்சில் அல்லது எழுத்தில் பயன்படுத்தும் சொற்கள் எளிமைப்படுத்தப்பட்டால் தொடர்பாடலின் விளைதிறனும் அதிகரிக்கும். இவ்விடயம் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட ரூடோல்ப் பிளெஸ் (Rudolf Flesch) என்பார் பின்வரும் வழிகாட்டலைத் தருகிறார். இவை ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுள்ளவை:

சொற்களைப் போலவே படங்களும் தொடர்பாடலுக்கான அடையாளங்களாகும். படங்கள் மிகவும் உறுதியான கட்புலப் படிமங்களை உருவாக்கக் கூடியவை. அதனால் தான் "ஆயிரம் சொற்களைவிட ஒரு படம் மேலானது" என ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உள்ளது.

செயல்கள்: **(Actions)** தொடர்பாடலுக்கான மூன்றாவது வகை அடையாளங்களாகும். இதனையே நாம் "சொல்சாரா தொடர்பாடல்" (non - verbal Communication) என்கிறோம். உடல் மூலமாக வெளிப்படுத்தும் ஒருவரது நடத்தையும் கூட சொல்சாரா தொடர் பாடல்களாக அமைகின்றன. ஆசிரியரின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இடைவெளி இருப்பின் அது "நம்பக இடைவெளி" (redibility gap) எனப்படுகிறது. இத்தகைய நம்பக இடைவெளி ஆசிரியருக்கும் மாணவர்க்கும் இடையிலான தொடர்பாடலின் விளைதிறனை குறைத்துவிடும்.

## தொடர்பாடலின் விளைதிறனை மேம்படுத்தல்

விளைதிறன்மிக்க தொடர்பாடல் தேர்ச்சி, ஆசிரியரின் வாண்மையை மேம்படுத்துகிறது. ஆசிரியர் தொடர்பாடலை மேற்கொள்ளும்போது பின்வருவனவற்றை நினைவிற் கொள்ளுதல் சிறந்தது:

* செவிமடுப்பவரின் கவனத்தை தன்பக்கம் திருப்பிக் கொள்ளல்;
* செவிமடுக்கும் திறனை தன்னில் விருத்தி செய்து கொள்ளல்.

* இரு வழி தொடர்பாடலை ஊக்குவித்தல்;
* மொழி, அதன் பொருள் ஆகியவை பற்றி கவனம் எடுத்தல்;
* எளிய, தெளிவான மொழிப்பிரயோகம்;
* நம்பகத் தன்மையைப் பேணல்;
* பெறுநரின் புலக்காட்சி பற்றி விழிப்பாக இருத்தல். அதேபோல அனுப்புபவரின் புலக்காட்சி பற்றியும் தெளிவாக இருத்தல்;
* செவிமடுப்போர் எதுவும் தெரியாதவர்கள் என எண்ணாதிருத்தல்
* தொடர்பாடலுக்குத் தடைகள் உள்ளன என்பதை எப்போதும் நினைவிற் கொள்ளல்

மேற்குறித்த யாவும் விளைதிறன் மிக்க தொடர்பாடலை மேற்கொள்ள விரும்பும் ஓர் ஆசிரியருக்கு மிகவும் முக்கியமானவைகளே. எனினும் இவற்றில் விளைதிறன்மிக்க செவிமடுத்தல் (**Effective Listering**) பற்றி ஆசிரியர் கூடிய கவனம் எடுத்தல் சிறந்தது. துரதிர்ஷ்ட வசமாக பெரும்பாலான வகுப்பறைகளில் தொடர்பாடல் என்பது மேலிருந்து கீழான (**Top down**) ஒரு வழித் தொடர்பாடலாகவே அமைந்து விடுகிறது. இத்தகைய தொடர்பாடல் வகுப்பறையின் உயிரோட்டத்தை அழித்து மாணவர்களின் துடிப்பையும் ஆர்வத்தையும் சிதறடித்து விடுகிறது.

அட்டவணை 2 ஆசிரியர் தனது செவிமடுத்தல் திறனை மேம்படுத்திக் கொள்ள சில உத்திகளை வழங்குகிறது:

## முடிவுரை

தொடர்பாடல் என்பது தகவல்களை கடத்துவதும் அவற்றை விளங்கிக் கொள்வதுமாகும். அனுப்பப்படும் தகவல்கள் மாற்றமோ, விகாரமோ இல்லாமல் விளங்கிக் கொள்ளப்படுமானால் அது விளைதிறன்மிக்க தொடர்பாடல் எனப்படும். தொடர்பாடல் இருவழிச் செயன்முறையாகும். அது பல கட்டங்களை ஒழுங்குமுறையில் கொண்டிருக்கிறது. தொடர்பாடலின் விளைதிறனுக்கு பல தடைகள் உள்ளன. அவற்றை தனியாள், பௌதீக, சொற்பொருள்சார் தடைகள் என வகைப்படுத்தலாம். இத்தடைகளை வெற்றி கொள்வதற்குப் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றில் விளைதிறனுடன் செவிமடுத்தல் மிகவும் முக்கியமானது. விளைதிறன்மிக்க ஆசிரியருக்கு தொடர்பாடல் தேர்ச்சிகள் மிகவும் முக்கியமானவை.

---

*மொழி வளர்ச்சிக்கு அடிப்படை மொழி தக்கவைப்பு (Language Maintenance) பெரும்பான்மை எண்ணிக்கையான மக்களைக் கொண்ட மொழிகளுக்கு மொழி தக்கவைப்பு பிரச்சினையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் சிறுபான்மையினர் பேசும் மொழிகளுக்கு இது பிரச்சினையாக இருக்க வாய்ப்புண்டு. ஒரு மொழியைப் பேசும் மக்கள் எப்பொழுது குடும்பச் சூழலிலும் உறவினர் சூழலிலும் நண்பர்கள் சூழலிலும் வேறொரு மொழியைப் பயன்படுத்துகிறார்களோ அப்பொழுதே அவர்கள் மொழி இழப்புக்கு உள்ளாகும் சூழ்நிலையை எதிர்நோக்குகிறது என்பது பொருள். பேச்சு என்பது மொழியின் உயிர்நாடி*

*இடத்தாலும் (Space) காலத்தாலும் (Time) போடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை உடைத்து மீறுகின்ற முயற்சிகள் வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றன. மனிதனின் நாகரிக வரலாற்றில் இரண்டு கண்டுபிடிப்புகளை முக்கியமானவையாகக் குறிப்பிடுவார்கள். (1) மனிதன் தான் பேசும் மொழிக்கு எழுத்தைக் கண்டுபிடித்தது. 2) சக்கரத்தைக் கண்டு பிடித்தது. ஒரு மொழியின் வரலாற்றில் எழுத்துருவாக்கம் ஒரு முக்கிய மைல்கல். எழுத்தில் உருவான மொழி பேசுவோன் - கேட்போன் என்ற இடக்கட்டுப்பாட்டையும் தலை முறைகளையும் தாண்டிப் போவதால் காலக்கட்டுப்பாட்டையும் தாண்டிச் செல்கிறது.*

*மொழி பேசுவோர் தங்கள் மொழி பயன்படுத்தப்படும் தளங்களை விரிவாக்குவது மொழி வளர்ச்சிக்கு இடும் முதல் வித்து. மொழிப் பயன்பாட்டில் எல்லைகளை (Domains of language use) நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை 1) கல்வி (Education) 2) மக்கள் தொடர்பூடகம் (Mass Media) 3) நிர்வாகம் (Administration), 4) நீதித்துறை (Jurisprudence). இப்பெரும் பிரிவுகளில் பல்வேறு உட்பிரிவுகளை இனம் கண்டு அவற்றில் மொழியைப் பயன்படுத்தும் முயற்சிகளைத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.*

**பேரா. இரா. சுந்தரம் எழுதிய பொருள் புதிது வளம் புதிது எனும் நூலுக்கு பேரா. சி. அரங்கன், எழுதிய அணிந்துரையில் 1999,**

# கற்றலுக்கான தலைமைத்துவம்

## அறிமுகம்

ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலை செல்லும் நோக்கத்தினை எல்லோரும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். இத்தகைய நோக்கங்கள் உண்மையில் நிறைவேறுகின்றனவா என்பதிலும் நாம் கவனம் செலுத்துதல் அவசியமானது. முறைசார் பாடத்திட்டத்தினை நிறைவேற்றுதல், மாணவர்களை இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல், மறைநிலை பாடத்திட்டத்தின் வாயிலாக அடைய வேண்டியவற்றை உறுதிப்படுத்துதல் போன்றவை குறிப்பாக பாடசாலைத் தலைமைத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

இவற்றிலும் மேலாக ஜாக்குவஸ் டேர்லோஸ் என்பவர் கற்றல் தொடர்பாக கற்பதற்குக் கற்றல், செய்வதற்குக் கற்றல், ஒன்றுகூடி வாழக் கற்றல், வாழ்வதற்குக் கற்றல் என்னும் நான்கு விடயங்களை எடுத்துக் காட்டியுள்ளார். இவை பாடசாலைத் தமைமைத்துவத்துக்கும் பெருஞ்சவாலாக மாறியுள்ளன. இவற்றினடிப்படையில் உலகளாவிய ரீதியில் கல்வியுலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் புதிய கோணங்களிலே நோக்கப்படுகின்றன.

அதே வேளையில் பாடசாலைகள் பொதுவாக நிருவாகப் பணிகளுடன் தம்மை மட்டுப்படுத்திக் கொண்டும், உயர் அதிகாரிகளின் கட்டளைகளுக்கிணங்கப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டும் வருகின்றன. இத்தகைய சூழலில் சமூகம் வேண்டி நிற்கின்ற புத்தாக்கங்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு. எய்து பொருளுடன் கூடிய (Goal) முகாமைத்துவத்தில் ஈடுபடுகின்ற பாடசாலைகள் ஏனையவற்றில் குறைந்தளவில் கவனஞ்செலுத்திக் கொண்டு, குறிப்பிட்ட எய்துபொருளை அடைவதற்கே முன்னுரிமை ஊக்குவிப்பும் அவற்றினை உறுதிப்படுத்துதலும் பின் தள்ளப்பட்டு விடுகின்றன. பாடசாலையில் இடம்பெறுகின்ற ஏனைய விடயங்களுள் மிகவுயர் மட்டத்தில் கற்றல் நிகழ்வதற்கான தலைமைத்துவத்தை வழங்க வேண்டியது அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள பாரிய பொறுப்பாகும்.

> கற்றலை விளங்கிக் கொள்ளுதல், கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்குவோரின் பிரதான பணியாகும். கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்குபவர்கள், அது பற்றிய ஆழமான அறிவும் விமர்சனத்துடன் கூடிய விளக்கமும் உடையவர்களாக இருப்பது முக்கியமானது. விளைதிறன் மிக்க கல்விசார் தலைவர்கள் தொடர்ந்தும் கற்றலில் ஈடுபடுவார்கள். புதிய விடயங்களைக் கற்பதிலே கவனஞ் செலுத்துவார்கள் அவர்கள் செல்லும் வழியும் மாற்றங்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும். கற்றலுக்கான அவர்களது பயணம் முன்னேறிச் செல்லும் போது கற்றல் செயல் முறை ஆழமாகும். விரிவுபடுத்தப்படும், வளம்படுத்தப்படும் மற்றும் ஏனைய விடயங்களுடன் இணைக்கப்படும்

பொதுவாகப் பாடசாலைகளின் தலைமைத்துவமானது தனியொருவரில் மட்டும் தங்கியிருப்பதில்லை. நிறைவேற்றுத் தலைவர்கள், வரிசை நிலைத் தலைவர்கள், மற்றும் முறையில் தலைவர்கள் என்ற வகையில் தலைமைத்துவம் பாகுபடுத்தப்படும் பொழுது இயல்பாகவே இது ஒரு கூட்டுத்தொழிற்பாடு என்பதனை இலகுவில் உணரலாம். ஆயினும் இத்தகைய தலைவர்கள் ஒவ்வொருவரும் தமக்கென வகுத்துக்கொள்ளும் வகிபங்குகளினால் கட்டுப்படுத்தப்படுகின்றனர். ஆயினும் கற்றலுக்கான தலைமைத்துவம் என்ற வகையில், தமது வகிபங்கினைக் கடந்து வகை சொல்ல வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் உரியதாகும்.

இக்கட்டுரையானது குறிப்பாக விளைதிறன்மிக்க கல்விசார் தலைமைத்துவம் பற்றியே கூறமுற்படுகின்றது.

முனைவர் மா. கருணாநிதி
கல்விப்பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

## கற்றலை விளங்குதல்

முதலிலே கற்றலை விளங்கிக் கொள்ளுதல், கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்குவோரின்

பிரதான பணியாகும். கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்குபவர்கள், அது பற்றிய ஆழமான அறிவும் விமர்சனத்துடன் கூடிய விளக்கமும் உடையவர்களாக இருப்பது முக்கியமானது. விளைதிறன் மிக்க கல்விசார் தலைவர்கள் தொடர்ந்தும் கற்றலில் ஈடுபடுவார்கள். புதிய விடயங்களைக் கற்பதிலே கவனஞ் செலுத்துவார்கள்; அவர்கள் செல்லும் வழியும் மாற்றங்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும். கற்றலுக்கான அவர்களது பயணம் முன்னேறிச் செல்லும் போது கற்றல் செயல்முறை ஆழமாகும், விரிவுபடுத்தப்படும், வளம்படுத்தப்படும் மற்றும் ஏனைய விடயங்களுடன் இணைக்கப்படும் (Louise, 2003).

ஆசிரியர்கள் முதலிலில் தாம் கற்பதனை உறுதி செய்வதன் மூலமே ஏனையவரின் கற்றலுக்கான வழிகாட்டலை வழங்க முடியும். கற்றல் செயல் முறைகளில் ஆழமான விளக்கம், புரிந்துணர்வு அவசியமாகின்றது. அத்துடன் மாணவர் எவ்வாறு கற்கின்றன என்ற அறிவும் பயன் தரும். பாடசாலைகளில் கற்றலில் ஈடுபடுவோர், கற்றல் என்பது பற்றித் தாம் பெற்றுக்கொண்ட விளக்கம், புலக்காட்சியின் அடிப்படையிலேயே தேவைகளை இனங்கண்டுகொள்வர். இத்தேவைகளுக்கு ஏற்பவே பாடசாலைகளும் தமது உபாயங்களை விருத்தி செய்வதனால், கற்புல முறைகளும் மாற்றியமைக்கப்படுகின்றன. இவற்றினைத் தொடர்புபடுத்தும் வகையில் வழிகாட்டல்கள் வழங்கப்படும் பொழுது, கற்றல் தொடர்பான சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தவல்ல கற்றல் நோக்கங்களை விரிவுபடுத்த முடியும். இவ்வாறான மாற்றங்களை பல்வேறு பரிமாணங்களுடன் அணுகும் ஆற்றல் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருத்தல் வேண்டும்.

## எதிர்பார்ப்புகள்

தற்காலக் கல்விச் செயற்பாடுகளின் எதிர்பார்ப்புகள் வேறுபட்டுக் காணப்படுவதால், மாணவர்கள் இயந்திரமயமான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மாணவர்கள் வகுப்பு அடிப்படையிலும் வகுப்பிற்குள் சிறு சிறு குழுக்களாகவும் பிரிக்கப்படுகின்றனர். இவ்வாறு பிரிக்கப்படும் பொழுது, அவர்கள் கற்கும் பாடங்களும் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. பாட அடிப்படையிலான பிரிவுகள் ஆசிரியர் மத்தியிலும் உள்ளன. இவற்றோடு, பெற்றோரும் தமது பிள்ளைகள் கற்கும் பாடங்கள் பற்றிய விழிப்புணர்வுடையவர்களாக மாறிவரும் பொழுது, அவர்களும் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவுவதில் பங்கேற்க விரும்புகின்றனர். இந்த அடிப்படையில் நோக்கும் பொழுது கற்றலுக்கான தலைமைத்துவத்தினை வழங்குபவர்கள் ஆசிரியர்கள், மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடியவர்களாக விளங்குதல் வேண்டும்.

## மனவெழுச்சி மாற்றங்கள்

கற்றலானது ஒரு மனவெழுச்சிசார்ந்த செயற்பாடாகும். கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவோருக்கு மாணவரின் மனவெழுச்சிசார் பதிற்குறிகளை அறியக் கூடிய ஆற்றல் இன்றியமையாதது. பல்வேறு சமூக மற்றும் கலாசாரப் பின்னணியிலிருந்து வருகின்ற மாணவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை விளங்கிக் கொண்டு, அவர்களின் கற்றலை உயர்நிலைக்குக் கொண்டுவரும் பொறுப்புடையவர்கள் ஆசிரியர்கள். புதிய நூற்றாண்டிலே நுழைந்துள்ள நாம் மனவெழுச்சி சார் விடயங்களில் அறிவுடையவராக இருத்தல் முக்கியமானது என ஆசிரியர்கல்வி ஆய்வாளர்கள் **(Carnell, 1998)** கூறுவர்.

வகுப்பறைகளில் மாணவர்கள் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டல், அவர்கள் மத்தியில் தோன்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல், மாணவர் பிரச்சினைகளைச் சீர்செய்தல் இங்கு முக்கியமானவை. மாணவர் மனவெழுச்சிப் பிரச்சினைகளை தீர்க்க முற்படும் ஆசிரியர்கள் முதலில் தமது மனவெழுச்சிகளை விளங்கிக் கொள்பவராக இருத்தல் வேண்டும். ஆசிரியரின் மனவெழுச்சிகளும் கற்றல் - கற்பித்தலையும் வழிகாட்டல்களையும் பாதிக்கின்றன என்பதைக் கருத்திற் கொள்ளல் வேண்டும். "இந்த ஆசிரியர் நாம் சொல்லும் எவற்றையும் கேட்பதில்லை" என மாணவர்கள் கூறுவதைச் சாதாரணமாகக் கவனிக்கலாம். கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்குபவர்கள் மாணவரின் மனவெழுச்சி மாற்றங்களை விளங்கிக்கொள்பவராக இல்லாவிட்டால், நம்பிக்கையை இழந்துவிடக்கூடும். மறுபுறத்தில் செயற்பாடுகளில் விருப்பமும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் குன்றும்.

கற்றலானது ஒரு மனவெழுச்சி சார்ந்த செயற்பாடாகும். கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவோருக்கு மாணவரின் மனவெழுச்சிசார் பதிற் குறிகளை அறியக் கூடிய ஆற்றல் இன்றியமையாதது. பல்வேறு சமூக மற்றும் கலாசாரப் பின்னணியிலிருந்து வருகின்ற மாணவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை விளங்கிக்கொண்டு, அவர்களின் கற்றலை உயர்நிலைக்குக் கொண்டு வரும் பொறுப்புடையவர்கள் ஆசிரியர்கள். புதிய நூற்றாண்டிலே நுழைந்துள்ள நாம் மனவெழுச்சிசார் விடயங்களில் அறிவுடையவராக இருத்தல் முக்கியமானது என ஆசிரியர் கல்வி ஆய்வாளர்கள் *(Carnell, 1998)* கூறுவர்

## கற்றலை உறுதி செய்தல்

கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்குவோர் தமது கற்றலையும் உறுதிசெய்து கொள்ள

வேண்டும். மாறிவரும் கல்விச் சூழலுக்கு ஏற்ப, அவற்றினை எதிர் கொள்ளக்கூடிய ஆற்றலும், அவசியமான உபாயங்களை முன்வைக்கக்கூடிய ஆற்றலும் இதனூடாகவே விருத்தியடைகின்றது. இவ்வாறான ஆற்றல்கள் தனியொரு வகிபங்குடன் மட்டும் இலகுவில் ஏற்படக் கூடியதல்ல. பல்வேறு வகிபங்குகளை ஏற்கும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களால் அறிவார்ந்த முகாமைத்துவ உபாயங்களை முன்வைக்க முடியும். சுறு சுறுப்பான, நெகிழ்ச்சிப் போக்கினைக் கடைப்பிடிக்கின்ற மற்றும் மனிதாபிமானம் மிக்கவர்களாலேயே தங்களை மட்டுமன்றி ஏனையோரையும் தொழிண்மை ரீதியாக ஊக்குவிக்கலாம்.

கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்குவோர் தமது கற்றலையும் உறுதிசெய்து கொள்ள வேண்டும். மாறிவரும் கல்விச் சூழலுக்கு ஏற்ப, அவற்றினை எதிர் கொள்ளக்கூடிய ஆற்றலும், அவசியமான உபாயங்களை முன்வைக்கக்கூடிய ஆற்றலும் இதனூடாகவே விருத்தியடைகின்றது. இவ்வாறான ஆற்றல்கள் தனியொரு வகிபங்குடன் மட்டும் இலகுவில் ஏற்படக்கூடியதல்ல. பல்வேறு வகிபங்குகளை ஏற்கும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களால் அறிவார்ந்த முகாமைத்துவ உபாயங்களை முன்வைக்க முடியும். சுறுசுறுப்பான, நெகிழ்ச்சிப் போக்கினைக் கடைப்பிடிக்கின்ற மற்றும் மனிதாபிமானம் மிக்கவர்களாலேயே தங்களை மட்டுமன்றி ஏனையோரையும் தொழிண்மை ரீதியாக ஊக்குவிக்கலாம்.

நிறுவனம் ஒன்றிலே நிகழ்கின்ற மாற்றங்கள் தனியொருவரால் மட்டும் நிகழ்ந்து விடுவதில்லை. பாடசாலை நடவடிக்கைகளில் மற்றவர்களையும் இணைக்கக்கூடிய சூழலையும் வாய்ப்புகளையும் உருவாக்கும் திறன் தலைமைத்துத்துக்கு இருத்தல் வேண்டும். இவ்வாறான விடயங்களில் முதலில் தம்மை ஈடுபடுத்துபவர்களே மற்றையவர்களையும் ஈர்த்துக் கொள்ளலாம். இவர்கள் முதலில் தமது தொழிண்மைசார் உயர்வுக்கான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு வளர்ச்சியை அடையும் பொழுது அவர் மீது ஏனையவருக்கும் நம்பிக்கை தோன்றும்.

## ஆற்றலைக் கட்டியெழுப்புதல்

கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்குபவர்கள் ஏனைய ஆசிரியர்களையும் மாணவர்களையும் வளம்படுத்துவதற்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்குதல் அத்தியாவசியமானது. இச்சந்தர்ப்பத்தில் சிக்கல் நிறைந்ததும் மாறிவருகின்றதுமான கல்விச் சூழலில் ஆற்றலைக் கட்டியெழுப்புபவர் என்ற வகிபங்கும் இங்கு முக்கியத்துவமானது. கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்கும் ஒருவர் ஆற்றலைக் கட்டியெழுப்புபவர் என்னும் வகிபங்கின் வாயிலாக மற்றவர்களைத் தனிப்பட்டமுறையிலும் தொழிண்மை சார்ந்த முறையிலும் கற்றலில் ஈடுபடுத்தலாம். பணியாற்றும் நிறுவனத்தின் நிலைமைகளும் ஆசிரியரின் கற்றலை ஊக்குவிக்கின்றது. பாடசாலையின் நிறுவன ரீதியான ஒழுங்கமைப்பு நிலைமை சாதகமாக இருக்கும் பொழுது பாடசாலை விருத்தியடைவதற்கான வாய்புகளும் உண்டாகின்றன (Rosenhotty 1989). இத்தகைய நிலைமைகள் ஆசிரியர்கள் தொடர்ச்சியாகக் கற்றலில் ஈடுபடுவதற்கும் இடமளிக்கின்றன. ஆசிரியர்கள் தொடர்ந்தும் கற்றலில் ஈடுபடாவிட்டால் மாணவர் மத்தியிலும் அத்தகைய நிலைமைகள் உருவாக்காமல் போகின்றன என்றும் ஆய்வாளர்கள் (Sarason, 1990) குறிப்பிடுகின்றனர்.

இறுதியாக, ஆசிரியர்களின் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியும் குறிப்பிடுதல் இங்கு முக்கியமானது. ஆசிரியர்களுடைய அனுபவங்கள் இவற்றுள் முதன்மை பெறுகின்றன. இவை ஒவ்வொருவரினதும் தொழிற்கோலம், தொழிலுக்குரிய முதன்மைகள், கற்றலுக்கான விருப்பம் என்பவற்றுக்குத் தூண்டுதலளிக்கின்றன (Sikes, 1992). இங்கு அடுத்த காரணியாக நம்பிக்கையைக் கூறலாம்.

ஆசிரியர்களின் புலக்காட்சிகள், மற்றும் அவர்களுடைய கற்பித்தலில் உண்டாகும் மாற்றங்கள் நம்பிக்கையினாலேயே தூண்டுதலளிக்கப்படுகின்றன. புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவதில் காட்டப்படும் விருப்பங்கள் இதன் மூலமே உருவாகின்றன. இவற்றோடு ஆசிரியர்களின் மனவெழுச்சிகள், ஊக்கல், தொடர்புகள், சமூக ஆதரவு, பாடசாலை நிலைமை, வெளிப்புற நிலைமை போன்றவற்றையும் குறிப்பிடலாம். இத்தகைய காரணிகளின் செல்வாக்குக்கு உள்ளாகி, கற்றுத் தம்மை வலுவூட்டிக் கொள்ளும் அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் கற்றலுக்கான தலைமைத்துவத்தைச் சிறந்த முறையில் வழங்க முடியும்.

**REFERENCE:**

Louis et at (2003) It's about Learning Routledge Falmer, London and New York.

Seriation, S (1990) The Predictable Failmer of Educational Reforms in Louis et at It's about Learning - Routledge Falmer, London & New york

Sides, P (1992") Imposed Change and Experienced Teachers. In Teacher Development and Educational Change, London.

Resolutely, S.J. (1989) Teacher's Work place Thee Social Organization of School New york.

□

# சமுதாயக்கல்வி அதிகரித்துவரும் தேவை

**வி. தற்பரன்**
இணைப்பாளர்,
பட்டப்பின் கல்வி நெறி,
திறந்த பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாண பிராந்திய நிலையம்.

## அறிமுகம்

முறைசார்ந்த பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் கல்வி, சாதாரண நிலைமைகள் காணப்படும் சமூகங்களிற்கும் மாற்றங்கள் குறைவாக இடம்பெறும் சமூகங்களிற்கும் பொருந்தக் கூடியன. ஆனால் இன்று எல்லா நாடுகளிலும் சமூகங்கள் பல்வேறு கட்டங்களில் நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர் கொள்கின்றன. அந்நிலையில் சமூகங்கள் அவற்றை எதிர்கொள்ளும் தகைமை உடையனவாக மாறவேண்டும். அவ்வாறான கல்வி ஏற்பாடு சமுதாயக்கல்வி ஆகும். சில நாடுகளில் இது வளர்ந்தோர் கல்வி என்றும் அழைக்கப்படுகின்றது. அதிகம் வளர்ச்சியடையாத நாடுகளில் சமூக முரண்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் சமுதாயக் கல்விக்கான தேவை பெருகி வருகிறது. இலங்கையிலும் இவ்வாறான கல்விக்கான அவசியமும் அவசரமும் அதிகரித்து வருகிறது.

## சமூகமும் நெருக்கடிகளும்

தனி நபர்களும் குடும்பங்களும் வேறு பல நாட்டக் குழுக்களும் தமது பொதுவான குறிக்கோள்களை அடையும் வகையில் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைகின்ற ஏற்பாடு சமூகமாகும். வேற்றுமைகளில் ஒற்றுமை காண்பதாகவும் வேற்றுமைகளின் தனித்துவம் பேணப்படுவதாகவும் இருப்பதை சமூகம் உறுதிப்படுத்துகிறது.

ஆண், பெண், வறிய, செல்வந்த, கிராம, நகர, தொழிலாளர், முதலாளி வகுப்பினர் போன்ற பலரும் தமது தேவைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஒன்றிணைவது சமூகமாகும். இவ் வேறுபாடுகளை குறைப்பதில் அல்லது வேறுபாடுகள் முனைப்படையாது பாதுகாப்பதில் சமூக விழுமியங்கள் முக்கியமானவை. இங்கு சமூக விழுமியங்கள் என்பது மக்களிடம் காணப்படும் ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு, நம்பிக்கை, மொழி உணர்வு, சமயப்பற்று, கலை நாட்டம் போன்ற பலவற்றையும் சுட்டுகின்றது. இந்த அம்சங்கள் சிறப்பாக உள்ள போது சமூக விழுமியம் சிறப்பானதாக கொள்ளப்படும். பலசமயங்களில் சமூக விழுமியங்கள் சமூக தனித்துவத்தையும் வெளிப்படுத்துகின்றன.

சமூகம் ஓர் ஒழுங்கு முறையான கட்டமைப்பைக் கொண்டதாகும். இந்தக் கட்டமைப்பில் பல சமூகக் குழுக்கள் மற்றும் சமூக வகுப்பினர் வாழுகின்றனர். இந்த சமூக கட்டமைப்பு மாற்றமடையும் தன்மையைக் கொண்டது. கல்வி கற்போர் விகிதம் அதிகரிப்பதும் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியும் சமூககட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதுண்டு.

சமூகம் ஓர் ஒழுங்கு முறையான கட்டமைப்பைக் கொண்டதாகும். இந்தக் கட்டமைப்பில் பல சமூகக் குழுக்கள் மற்றும் சமூக வகுப்பினர் வாழுகின்றனர். இந்த சமூக கட்டமைப்பு மாற்றமடையும் தன்மையைக் கொண்டது. கல்வி கற்போர் விகிதம் அதிகரிப்பதும் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியும் சமூககட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதுண்டு.

ஓர் சமூகத்தின் சொத்துரிமை முறை உற்பத்தி முறை, அதன் தொழில் நுட்ப தராதரம், வெளிச் சமூகத்துடனான தொடர்பு பெண் விடுதலை வாய்ப்பு போன்ற பல காரணிகள் சமூகங்களை மாற்றியமைக்க வல்லன. மின்சார விநியோகமும், ஒழுங்கான தொடர்பாடல் வசதிகளும் கூட சமூக மாற்றங்களை ஊக்குவிப்பதாக சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். போக்குவரத்து, தொடர்பாடல் போன்ற வசதிகள் அதிகரிக்கும் போது சமூகம் மாற்றத்திற்கான விசையைப் பெறுகின்றது. இவற்றில் கல்வி மற்றும் பயிற்சி முக்கிய பங்கை வகிக்கின்றன.

சமூகங்கள் காலத்திற்கு காலம் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்ளும் போது அதற்கேற்றதாக அவற்றை எதிர் கொள்ளும் ஆற்றலை-

யும் சீராக்க திறன்களையும் பெற வேண்டி உள்ளது. அத்தகைய திறன்களை வழங்குவதில் சமுதாயக்கல்வி மிகவும் முக்கியத்துவம் உடையது. பொதுவாக சமூக நெருக்கடிகள் அல்லது சமூக ஸ்திரமற்ற தன்மைகள் பின்வரும் நிலைமைகளால் ஏற்படுவதுண்டு.

1. ***இயற்கை அனர்த்தங்கள் :***
வறட்சி, வெள்ளப்பெருக்கு, புவி அதிர்வு, சுனாமி போன்ற பேரலைத்தாக்கம், எரிமலைத் தாக்கம் போன்றன. இவை சமூகங்களின் கட்டமைப்பையே சிதைத்து விடக்கூடியன. அண்மைக் கால சுனாமித்தாக்கம் கடற்கரையோர கட்டமைப்பையும், பொருளாதார செயன்முறைகளையும் சிதைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால் சமூகங்கள் பாதுகாப்பற்றனவாகவும் விரக்தியுற்றவையாகவும் தென்படுகின்றன.

சமூகம் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளிலிருந்து விடுவிப்பதற்கும், மக்களை ஊக்குவிப்பதற்கும் உரிய கல்வி மற்றும் பயிற்சி வழங்கப்பட வேண்டும். அவ்வாறான ஏற்பாடு சமுதாயக்கல்வி ஆகும். இதனை வளர்ந்தோரிற்கான கல்வி என்றும் அழைப்பர்.

சமூகங்கள் காலத்திற்கு காலம் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்ளும் போது அதற்கேற்றதாக அவற்றை எதிர் கொள்ளும் ஆற்றலையும் சீராக்க திறன்களையும் பெற வேண்டி உள்ளது. அத்தகைய திறன்களை வழங்குவதில் சமுதாயக்கல்வி மிகவும் முக்கியத்துவம் உடையது.

2. ***யுத்தமும் சமூகமட்ட குழப்பங்களும் :***
தொடர்ச்சியாக யுத்தம் நிகழுகின்ற நாடுகளில் சமூக விழுமியங்களை பேண முடிவதில்லை. இதனால் சமூகங்கள் உறுதியற்றனவாக, விழுமியங்களை இழந்தனவாக காணப்படுவதுண்டு.

3. ***தொற்றுநோய்கள் :***
திடீரென ஏற்படும் தொற்று நோய்கள் குழந்தைகளையும், தாய்மாரையும், உழைக்கும் வகுப்பினரையும் பாதிக்கும் போது சமூக பாதுகாப்பு நிச்சயமற்றதாகிறது. மலேரியா, டெங்குகாய்ச்சல் போன்றன இவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு.

4. ***தவறான நுகர்வுப் பழக்கம் :***
ஊடகங்களும், வேறு சில அரங்குகளும் பல சமயங்களில் விளம்பரங்கள் மூலமாக மாணவரிற்கு பொருத்தமற்ற பண்டங்களை விற்கின்றன. இதனால் தீமை அதிகரிக்கிறது. இது சமூக ஒழுங்கை சிதைத்துவிடுகின்றது.

5. ***தொழில் நுட்ப மாற்றம் :***
சில சமூகங்கள் நவீன தொழில்நுட்ப உபகரணங்களை சடுதியாக கையாள முற்படும் போது சமூகத்தில் ஒரு சிலர் தீங்குறு பிரிவினராகிவிடுவர்

6. ***ஊடகங்கள் :***
வானொலி, தொலைக்காட்சி மற்றும் அரங்குகள் போன்றன பல சமயங்களின் பொருத்தக் கேடான தகவல், அறிவு, உணர்வு போன்றவற்றை தூண்டுகின்றன. இதனால் சமூக முரண்பாடுகளும் குழப்பங்களும் அதிகரிக்கின்றன.

7. ***அரசியல் ஸ்திரமின்மை :***
சில நாடுகளில் அரசியல் மாற்றங்கள் மிக சடுதியாக நிகழ்வதுண்டு. இத்தகைய அரசியல் மாற்றங்கள் மறைமுகமாக பல தீய விளைவுகளை உருவாக்கிவிடுகின்றன.

8. ***வெளிநாட்டு தொடர்பு :***
உறவினர்கள் நண்பர்கள் வெளிநாடுகளில் அதிகம் வசிக்கும் போது அவர்களது தொடர்புகளால் உள்ளூர் மக்களிடம் புதிய எண்ணங்களையும், நடத்தைகளையும் உருவாக்கிவிடுகின்றன. இது சமூக நெருக்கடிகளை ஏற்படுத்தும். இத்தகைய பல்வேறு நிலைமைகள் சமூகங்களிற்கு சவால்களை தோற்றுவிக்கின்றன.

## சமுதாயக்கல்வி

சமூகம் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளிலிருந்து விடுவிப்பதற்கும், மக்களை ஊக்குவிப்பதற்கும் உரிய கல்வி மற்றும் பயிற்சி வழங்கப்பட வேண்டும். அவ்வாறான ஏற்பாடு சமுதாயக்கல்வி ஆகும். இதனை வளர்ந்தோரிற்கான கல்வி என்றும் அழைப்பர். நடைமுறையில் பின்வருவோர் இத்தகைய கல்வியை வேண்டி நிற்கின்றனர்.

1. எழுத்தறிவற்றோர்.
2. பெண்களும் தாய்மாரும்
3. பள்ளி செல்லாச் சிறுவர்கள்
4. போதிய கல்வியும் பயிற்சியும் அற்ற தொழிலாளர்கள்
5. தொற்று நோய்களிற்கு உள்ளாவோர்
6. புவியியல் ரீதியாக பின் தங்கியோர்
7. அனர்த்தங்களால் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டோர்.

இவ்வாறான பல்வேறு பிரிவினரையும் பிரச்சினைகளிலிருந்து விடுவிக்கவும், அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றலை அவர்களிடம் வளர்க்கவும் சமுதாயக்கல்வி வழங்கப்பட வேண்டும்.

சமூக மட்டத்தில் பல்வேறு நிறுவனங்கள் மக்களிற்கு எழுத்தறிவை வழங்கவும், தொழில் நுட்ப பயிற்சியை வழங்கவும், நோய் தொடர்பான காப்புணர்வை வளர்க்கவும் வேண்டி உள்ளது. அவ்வாறான கல்வி

முயற்சிகள் சமுதாயக் கல்வியாக கருதப்படும்.

விவசாய கைத்தொழில் துறைகளில் ஏற்படும் சடுதியான மாற்றங்களை அறிந்து கொள்ளாத தொழில் அணியினர் பெருமளவில் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்கு இத்தகைய விழிப்புணர்வு கல்வியினூடாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

பொதுவாக பின்வருவோர் இத்தகைய சமுதாயக்கல்வியை வழங்குவதில் பங்கேற்கலாம்.

1. சன சமூக நிலையங்கள்
2. சமூக தொண்டு நிறுவனங்கள்
3. மாதர் மன்றங்கள்
4. இளைஞர் விளையாட்டுக் கழகங்கள்
5. சமூக சேவை நிறுவனங்கள்
6. சிறுவர் அதிகார சபைகள்
7. தொழிற்சங்கங்கள்
8. ஊடகங்கள்.

சமூக மட்டத்தில் பல்வேறு நிறுவனங்கள் மக்களிற்கு எழுத்தறிவை வழங்கவும். தொழில் நுட்ப பயிற்சியை வழங்கவும். நோய் தொடர்பான காப்புணர்வை வளர்க்கவும் வேண்டி உள்ளது. அவ்வாறான கல்வி முயற்சிகள் சமுதாயக் கல்வியாக கருதப்படும்.

விவசாய கைத்தொழில் துறைகளில் ஏற்படும் சடுதியான மாற்றங்களை அறிந்து கொள்ளாத தொழில் அணியினர் பெருமளவில் பாதிக்கப் படுவதை தவிர்ப்பதற்கு இத்தகைய விழிப்புணர்வு கல்வியினூடாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

இத்தகைய நிறுவனங்கள் ஒழுங்கான முறையில் உள்ளூர் மட்டத்தில் சமூகத்திற்கு தேவைப்படுகின்ற அவசரமான, ஆரோக்கியமான அறிவையும், பயிற்சியையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். நடைமுறையில் இதற்கான செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கிடைக்க கூடிய மனிதவளத்தைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆசிரிய கல்வியில் ஈடுபடும் ஆசிரியர்கள் சமூகத் தாய்மார் போன்ற பலரையும் இத்தகைய விழிப்புணர்வு சார்ந்த கல்விக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இத்தகைய கல்வி இலங்கை போன்ற நாடுகளில் முன்னேற்றகரமானவையாக்கப்பட வில்லை. பல இடங்களில் முறைசார் கல்வி நிறுவனங்கள் இத்தகைய பிரச்சினைகளிற்கு தீர்வு காணலாம் என நம்புகின்றனர். அல்லது பாடசாலைகளுடன் ஒன்றிணைக்கப்பட்ட முறைசார கல்வித் திட்டங்கள் இதற்கு உதவும் என நம்புகின்றனர். உண்மையில் ஒழுங்கமைந்த சமுதாயக் கல்வி வளர்க்கப்படும் போது தான் இத்தகைய சமூக சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலை மக்களிற்கு வழங்க முடியும்.

## முடிவுரை

நெருக்கடிகள் மற்றும் பிரச்சினைகளில் ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக வாழ்கின்ற இலங்கை போன்ற நாடுகளில் சமுதாய கல்விக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய தேவை அதிகரித்து வருகிறது.

முறைசார் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் என்பவற்றுடன் ஒன்றிணைந்த வகையில் இத்தகைய கல்வியை வழங்குவதற்கான செயற்திட்டங்களை இலங்கை அதிகம் வேண்டி நிற்கின்றது.

புதிய நிலைமைகளையும் பிரச்சினைகளையும் கவனத்திற் கொண்டு கல்வியியலாளர்களும், கல்வியை திட்டமிடுவோரும் நிதி வழங்குவோரும் மீள வடிவமைக்கப்படும் சமுதாயக் கல்வி செயற்திட்டங்களை தயாரிக்க வேண்டும், படிப்படியாக நடை முறைப்படுத்த வேண்டும். பொருத்தமான அளவு கருவிகள் மூலம் அவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும்.

இத்தகைய ஒன்றிணைந்த கல்வி செயற்பாடுகள் பற்றி அடுத்துவரும் தசாப்தங்களில் இலங்கையில் உயர் கல்வி நிறுவனங்கள் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானது என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

*பிள்ளைகளை வயது அடிப்படையில் குழுக்களாகப் பிரித்துக் கற்பிப்பது கல்வி முறையின் தோல்விக்கு ஒரு முக்கிய காரணம் என்பது பல ஆய்வாளர்களின் கருத்தாகும். இத்தகைய ஏற்பாட்டினால் நன்றாகப் படிக்கும் பிள்ளைகள், பிற பிள்ளைகள் தமது தராதரங்களை எட்டிப்பிடிக்கும் வரையில் காத்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு மாணவர்களைத் தனித்தனி வகுப்புகளில் வயதடிப்படையில் இருத்திக் கற்பிப்பதற்கு எதிரான பல மாற்று ஏற்பாடுகளைப் பல கல்வியாளர்கள் முன்வைத்துள்ளனர்.*

***பேரா. சோ. சந்திரசேகரன், "கல்வி - ஒரு பன்முக நோக்கு" 2004, பக் 41***

# விளையாட்டு முறையில் அயல் மொழிப் பயிற்சி

அன்னியர்களின் ஆதிக்கக் குறியீடாக வந்த ஆங்கிலம் இந்தியாவை இணைக்கும் சங்கிலியாகவும், உலகத்தை நம்மோடு தொடர்புபடுத்தும் சாளரமாகவும், அறிவு யுகத்தின் செல்வங்களை விரைவில் கொண்டு தரும் சாதனமாகவும் நமக்குப் பயன்பட்டு வருகிறது.

ஆங்கிலத்தை "சரஸ்வதியின் கொடை" என வருணித்தார் ராஜாஜி.

"அடிமைப்படுத்திய ஊடகம் (enslaving medium) எழுச்சிமிக்க ஆயுதமாக (Insirgent Weapon) மாறிவிட்டது" என்பார், நோபல் பரிசு பெற்ற ஆப்பிரிக்க நாடக ஆசிரியர் சோயிங்கா.

> இரு மொழிகளையும் ஒரே சமயத்தில் கற்பிப்பதால், பண்பாட்டு ரீதியிலும், மொழியியல் அடிப்படையிலும் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளது. இரு மொழியாற்றலுக்குப் (*Bilingual*) பதிலாக இரண்டும் கெட்ட மொழி (*Interlanguage*) உருவாகும் வாய்ப்புள்ளது. இவற்றைத் தடுத்து, ஓர் இணைந்த இரு மொழியாற்றலை (*Co-ordinate Bilingualism*) உருவாக்க சரியான அணுகுமுறையும், பயிற்சியும் தேவை. ஆனால், தளம் தாய்மொழியாகவே இருக்க வேண்டும். குழந்தை ஆரம்பக்கல்வியில் அடி எடுத்து வைக்கும் போதே, தாய் மொழிச் சீதனத்தோடுதான் வருகிறது.

இருமொழி ஆற்றல், வித்தியாசமான சிந்தனையை (Divergent Thinking) வலுப்படுத்தும் என கனடா நாட்டு மொழியியல் ஆய்வுகள் காட்டியுள்ளன. அதற்காக ஆரம்பக் கல்வியின் தொடக்க நிலையிலேயே ஆங்கில மொழிப் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட வேண்டுமா என்பதுவே இப்போதைய வினா.

"இளமையில் கல்" என்பது மொழிக் கல்விக்கும் பொருந்துவதே. சிறகடித்துப் பறக்கும் சிறார்களுக்கு, புதிய ஒலிகளை உச்சரிப்பது சுலபமானது மட்டுமல்ல, சுவையானதும் கூட. அவர்களிடம் தடைப்படுத்தும் தன்னுணர்வு குறைவு. யுனெஸ்கோ அறுபதுகளில் நடத்திய ஆய்வு ஒன்று, "நற்பண்புகளைப் போல் பேச்சையும் அறியாப் பருவத்தில் நாம் சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடியும்" என்பதை வலியுறுத்துகிறது. இது இரண்டாவது மொழிக்கும் பொருந்தும். ஆனால் தாய்மொழிக் கல்விக்கும் இரண்டாம் மொழிக் கல்விக்கும் உள்ள வேறுபாடுகளையும், அவற்றுக்கிடையே இருக்கக்கூடிய சரியான தொடர்புகளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பார்க்கப் போனால், தாய்மொழியைக் "கற்றுக்" கொள்வதில்லை; வளரும் குழந்தை, வாழ்வுப் பூங்காவில் குதித்து விளையாடும்போது, இயல்பாகவே தாய்மொழியை சுவீகரித்துக் கொள்கிறது. முதன் மொழியைப் பெற்றுக் கொள்கிறோம் (***Acquired***); இரண்டாம் மொழியைக் "கற்று"க் கொள்கிறோம் (***Learned***) என்பார்கள் மொழியியல் அறிஞர்கள். ஆனால் எந்த மொழியையும் வெறும் போலச் செய்தல் (***Imitation***) மூலம் பெற்றுக் கொள்ளவோ, கற்றுக் கொள்ளவோ முடியாது.

சோம்ஸ்கியின் கருத்துப்படி அனைத்துக் குழந்தைகளிடமும் ஓர் உள்ளார்ந்த (**Inmate**) ஆற்றல் உள்ளது. அதனை மொழியைப் பெறும், உருவாக்கும் சக்தி (**Language Acquisition Device**) என்பார். அந்த ஆற்றல் தான் மொழி நிகழ்வுகளின் அடித்தளமான விதிகளைக் குழந்தைகள் பிரித்துப் புரிந்துகொண்டு, புதிய வாக்கியங்களைப் படைக்கச் செய்கிறது. கிளிப் பிள்ளைகள் போல், வாக்கியங்களைத் திருப்பிச் சொல்வதால் மொழியை அடையவோ அறியவோ முடியாது. ஆனால் முதல் மொழியில், இது பிரக்ஞைக்கு உட்படாமல் (**Unconsciously**) நிகழ்கிறது; இரண்டாவது மொழியில் பிரக்ஞை நிலையில் நிகழ்கிறது.

எனவே, இரு மொழிகளையும் ஒரே சமயத்தில் கற்பிப்பதால், பண்பாட்டு

**முனைவர் கா. செல்லப்பன்**
ஆங்கிலப் பேராசிரியர் (ஓய்வு)
தமிழ்நாடு

ரீதியிலும், மொழியியல் அடிப்படையிலும் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளது. இரு மொழியாற்றலுக்குப் (**Bilingual**) பதிலாக இரண்டும் கெட்ட மொழி (**Interlanguage**) உருவாகும் வாய்ப்புள்ளது. இவற்றைத் தடுத்து, ஓர் இணைந்த இரு மொழியாற்றலை (**Co-ordinate Bilingualism**) உருவாக்க சரியான அணுகுமுறையும், பயிற்சியும் தேவை. ஆனால், தளம் தாய்மொழியாகவே இருக்க வேண்டும். குழந்தை ஆரம்பக் கல்வியில் அடி எடுத்து வைக்கும் போதே, தாய்மொழிச் சீதனத்தோடுதான் வருகிறது. மூன்று, நான்கு வயதுக்குள் குழந்தை, ஒரு மொழியின் அடிப்படையை, கட்டுமானத்தைப் பெற்று விடுகிறது. அது போகப் போக விரிவும்'தெளிவும் பெறுகிறதே தவிர, அதன் அடித்தளத்தை ஐந்து வயதுக்குள் பெற்று விடுகிறது. ஆனால், பள்ளியில் அதன் எழுத்து வடிவத்தையும், இலக்கணத்தையும் அறிவார்ந்த நிலையில் கற்றுக் கொள்கிறது.

**குழந்தைகள் தாய்மொழியைக் "கற்றுக்" கொள்வதில்லை வளரும் குழந்தை, வாழ்வுப் பூங்காவில் குதித்து விளையாடும்போது, இயல்பாகவே தாய்மொழியை சுவீகரித்துக் கொள்கிறது. முதன் மொழியைப் பெற்றுக் கொள்கிறோம் (*Acquired*); இரண்டாம் மொழியைக் "கற்று"க் கொள்கிறோம் (*Learned*) என்பார்கள் மொழியியல் அறிஞர்கள். ஆனால் எந்த மொழியையும் வெறும் போலச் செய்தல் (*Imitation*) மூலம் பெற்றுக் கொள்ளவோ, கற்றுக் கொள்ளவோ முடியாது.**

இதே கால கட்டத்தில் இன்னொரு மொழியையும் கற்றுக் கொள்வதின் இடர்பாடுகள் இருமொழிக் கல்வியையும் பாதிக்கும் வாய்ப்புள்ளது. இதைத் தடுப்பதற்குத் தக்க மாற்று அணுகுமுறைகள் அவசியம். இரண்டாம் மொழியான ஆங்கிலத்தை இசை, உரையாடல் மற்றும் விளையாட்டோடு கற்க வழிவகுக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும், ஆங்கிலத்தின் வரிவடிவத்தையும் எடுத்த எடுப்பிலேயே கற்பிக்கக்கூடாது. மொழியின் முதல் நிலை, முக்கியமான நிலை ஒலிவடிவம் தான். எழுத்து அதன் நிழல் தான். குழந்தைகள் உச்சரிப்பைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளும். அதுவும் நர்சரி சந்தங்கள் மூலமாக எளிதாகவும் இனிதாகவும் கற்க முடியும். ஆங்கிலத்தில் எழுத்துக்களுக்கும் ஒலிகளுக்கும் இயைபு குறைவு என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும். முதலில் முழுச் சொற்களையோ, தொடர்களையோ, "பார்த்துச் சொல்ல வைக்கும் அட்டைகளை" (Look and Say Cards) வரிவடிவில் அறிமுகப்படுத்தி படிப்படியாகத்தான் தனித்தனி எழுத்துகளை அடையாளம் கண்டு கொள்ளவும், பிறகு அவற்றை எழுதவும் கற்பிக்க வேண்டும்.

முடிவாக, தாய்மொழியை அறிவார்ந்த நிலையில் கற்க ஆரம்பிக்கும்போது, அயல் மற்றும் இரண்டாம் மொழிகளை விளையாட்டு முறையில் கற்பிப்பதே மேல். அப்போது மொழிக் கல்வி, செயலோடு இணைந்த, மகிழ்ச்சி தரும் அனுபவமாகும். ஆரம்பக் கல்வியில் அனைத்துப் பாடங்களையும் ஒரு மகிழ்ச்சியான, ஆடல், பாடல், கதை, செயலோடு இணைந்த ஆனந்த அனுபவமாகத்தான் குழந்தைகளுக்குத் தர வேண்டும்.

விண்மீன்களோடு விளையாடி மண்ணின், மழலையின் மௌனத்தோடு உரையாடி, சக குழந்தைகளோடு உறவாடி, ஆனந்தமாக அகவிழிப்புப் பெறும் கல்வியாக ஆரம்பக் கல்வி அமைய வேண்டும். அப்போது தான், "எங்கே, மனம் அச்சமற்று இருக்கிறதோ, தலை நிமிர்ந்து நிற்கிறதோ, எங்கே அறிவு சுதந்திரமாய் இருக்கிறதோ, அந்த சுதந்திர சொர்க்கத்தில் என் நாடு விழித்தெழட்டும்" என்ற கவியரசர் தாகூரின் கனவு நனவாகும்.

*(தினமணி 30-06-2003)*

❑

---

மொழி வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் தொடர்பாடல் தேவைகளுக்கு ஏற்ப அச்சமூகத்தின் மொழி பெறும் இணக்கப்பாட்டைக்குறிக்கும். காலம் தோறும் ஏற்படும் சமூக வளர்ச்சி அச்சமூகத்தின் தேவையை அதிகரிக்கின்றது. அதனை ஈடு செய்யும் வகையில் மொழியும் வளர்ச்சியடைகின்றது. கபிலரும் பரணரும் வாழ்ந்த சங்க கால மக்களின் தொடர்பாடல் தேவைகளும், கம்பரும் ஒட்டக்கூத்தரும் வாழ்ந்த காலத்து மக்களின் தொடர்பாடல் தேவைகளும் எமது காலத்துத் தொடர்பாடல் தேவைகளும் மிகவும் வேறுபட்டவை, அவர்கள் பரிமாறிக் கொண்டவற்றை விட மிகவும் அதிகமான, மிகவும் வேறுபட்ட தகவல்களை நாம் இன்று பரிமாறிக்கொள்கின்றோம். அதற்கு ஏற்ப நம்காலத்து மொழியும் வளர்ச்சியடைந்துள்ளது. நாம் இன்று பறிமாறிக் கொள்ளும் தகவல்களை அவர்கள் காலத்து மொழியில் நம்மால் தொடர்பாடல் செய்ய இயலாது.

***டாக்டர். எம்.ஏ.நுஃமான், தொடர்பாடல், மொழி நவீனத்துவம் 1993, பக் 9***

# மாணவர்களுக்கான இணைப்பாடவிதான போட்டி நடைமுறைகளில் மாற்றம் அவசியம்

எமது நாட்டில் மாணவர்கள் பல எதிர்பார்ப்புகளுடன் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். இவர்கள் கல்வி அடைவை மாத்திரமல்ல, வாழ்வதற்கு வேண்டிய பல தேர்ச்சிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாகவும் அரசு முறைசார் கல்வியில் பல மாற்றங்களை அடிக்கடி ஏற்படுத்தி வருகின்றது. புதிய கல்விச் சீர்திருத்தத்திலும் ஏட்டுக் கல்வியை விட, செயற்பாட்டுக் கல்விக்கு மிக்க அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகள், பாடவிதான செயற்பாடுகளுக்கு மேல் ஒரு படி சென்று விடுகின்றன. மாணவர் மத்தியில் பலவிதமான போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. உள்ளக, வெளியக தேசிய மட்டத்தில் என்று இது மிக்க பிரிவு பெற்றுள்ளது. கல்வி நிர்வாக மாவட்டத்தில் தமிழ் மொழி, ஆங்கில தின போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வேறு நிறுவனங்களும் கட்டுரை, கவிதை, சிறுகதை, விவாதம், பொது அறிவு போட்டிகளை நடாத்துகின்றன. இதனூடாக மாணவர்களுக்கு பல சந்தர்ப்பங்களும், பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இவை மிக்க அவசியமானவையும் பாராட்டப்படக்கூடியவையுமாகும்.

தற்போது பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகள், பாடவிதான செயற்பாடுகளுக்கு மேல் ஒரு படி சென்று விடுகின்றன. மாணவர் மத்தியில் பலவிதமான போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. உள்ளக, வெளியக தேசிய மட்டத்தில் என்று இது மிக்க பிரிவு பெற்றுள்ளது. கல்வி நிர்வாக மாவட்டத்தில் தமிழ் மொழி, ஆங்கில தின போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வேறு நிறுவனங்களும் கட்டுரை, கவிதை, சிறுகதை, விவாதம், பொது அறிவு போட்டிகளை நடாத்துகின்றன. இதனூடாக மாணவர்களுக்கு பல சந்தர்ப்பங்களும், பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இவை மிக்க அவசியமானவையும் பாராட்டப்படக்கூடியவையுமாகும்.

பல்கலைக்கழக அனுமதியில் எல்லாப் பீடங்களுக்கும் 0.5 சதவீதமான ஒதுக்கீடு இணைப்பாட விதானத்தில்தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெறும் மாணவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது.

K. ஞானரெத்தினம்
மட்டு சிவாநந்தா ஆசிரியர்

தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும் இப்போட்டிகள் சில சந்தர்ப்பங்களில் சிறப்பான முறையில் நடாத்தப்படுவதில்லை என்ற கருத்துக்கள் பரவலாகவுள்ளன. பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் இது பற்றி அடிக்கடி கவலை அடைகின்றனர். இதனால் இப்போட்டிகள் தொடர்பாக மாணவர்கள் எதிர் மறையான எண்ணங்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

போட்டி ஏற்பாட்டாளர்கள் எப்படியாவது ஒரு போட்டியை நடாத்தி விடுவோம் என்றில்லாது, மற்றவர் போற்றும் வகையிலும், மற்றவர்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு முன் மாதிரியாக அமையுமாறும் இப் போட்டிகளை நடாத்துவது அவசியமானதாகும். எப்போது நடாத்துவது, யாரைக் கொண்டு நடாத்துவது, நடுவர்கள் யார்? புள்ளித்திட்டம் என்ன? தெரிவுகள் எப்படி அமைய வேண்டும்? போன்ற பல விடயங்களை முன் கூட்டியே தீர்மானித்து விடவேண்டும். ஆனால் பொதுவாக போட்டிகளில் பின்வரும் நிர்வாக குறைபாடுகள் இனங்காணப்படுகின்றன.

### 1. போட்டி தொடர்பான சுற்று நிருபங்கள்

சுற்று நிருபங்கள் உரிய நேரத்தில் மாணவர்களைச் சென்றடைய வேண்டும். பாடசாலை நிர்வாகம் மாணவர்களைத் தயார்படுத்துவதற்கு இது உதவியாக அமையும். சில பாடசாலைகளுக்கு சுற்று நிருபங்கள் அனுப்பப்படுவதில்லை. குறிப்பாக நகரப் பாடசாலைகள் மட்டும் கருத்தில் கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. போட்டி தொடர்-

பான சுற்று நிருபங்கள் தெளிவான விளக்கங்களுடன் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பாவது பாடசாலைகளைச் சென்றடைய வேண்டும். இச்சுற்று நிருபங்களில் போட்டி பற்றிய விதிமுறைகள், நடைபெறும் திகதி, நேரம், இடம், பரிசு விபரம் எல்லாம் கோடிட்டுக் காட்டப்படுதல் வேண்டும், போட்டி தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதும் சிறப்பானதாகும்.

போட்டி ஏற்பாட்டாளர்கள் எப்படியாவது ஒரு போட்டியை நடாத்தி விடுவோம் என்றில்லாது, மற்றவர் போற்றும் வகையிலும், மற்றவர்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு முன் மாதிரியாக அமையுமாறும் போட்டிகளை நடாத்துவது அவசியமானதாகும். எப்போது நடாத்துவது, யாரைக் கொண்டு நடாத்துவது, நடுவர்கள் யார்? புள்ளித்திட்டம் என்ன? தெரிவுகள் எப்படி அமைய வேண்டும்? போன்ற பல விடயங்களை முன் கூட்டியே தீர்மானித்து விடவேண்டும்.

## 2. பாடசாலைகளில் இருந்து மாணவர் பங்கு கொள்ளல்

சுற்று நிருபங்கள் உரிய நேரத்தில் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற போதிலும் சில அதிபர்கள் இவற்றில் அக்கறை எடுப்பதில்லை. அல்லது கோவைகளில் மாறிவைத்து விட்டு மறந்து விடுகின்றனர். இதனால் இப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் உரிமை மறுக்கப்படுகின்றது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய போட்டிகளில் பங்கு கொள்வதன் மூலம் மாணவருக்கு விரிசிந்தனை கிடைக்கிறது. புதிய மாணவர் தொடர்பு, சமூகமயமாதல் என்பனவற்றிற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

"எங்கள் பாடசாலையில் இதற்கெல்லாம் மாணவர் முன்வருவதில்லை", "இப்பாடசாலை மாணவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள்" என்ற வாதங்களும் உண்டு. மாணவர்களை உற்சாகப்படுத்தி, போட்டிகளின் முக்கியத்துவத்தை புரியவைத்து அவர்களுக்கு போதிய பயிற்சி அளித்து அவர்களைப் போட்டிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டியது அதிபர், ஆசிரியர்களின் கடமையாகும். பாடசாலைகளில் உள்ளக மட்டத்தில் அதிகமான போட்டிகளை நடாத்தும் போது, அதிக மாணவர்கள் இனங்காணப்படுவதற்கு வாய்ப்பு அதிகமாகும். "சந்தர்ப்பம் கொடுக்கப்படும் போது சாதனைகள் பிறக்கின்றன" என்ற மாவீரன் நெப்போலியனின் கருத்தையும் "அதிக தடவைகள் பங்கு பற்றும் போது தோல்விகள் குறைக்கப்படுகின்றன" என்ற கருத்தையும் நாம் நினைவு கூரவேண்டும். இணைப்பாடவிதான செயற்பாடுகள் நடைபெறாத பாடசாலைகளையே கல்விச்சிந்தனையாளர் "எலிஸ்" என்பவர் "இறந்து விட்ட பாடசாலைகளாக" கருதுகின்றார். பல சாதனையாளர்களின் பாடசாலை காலத்தை ஆராயும் போது அவர்கள் இணைப்பாட விதானத்தில் முக்கிய பங்காளிகளாக இருந்ததை பல ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

## 3. மாணவரைத் தெரிவு செய்தலும் பயிற்சி வழங்கலும்

"பயிற்சி திறன் வளர்க்கும்" என்பது கல்விச் சிந்தனை. மிகவும் பொருத்தமான மாணவர்களை பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்தல் வேண்டும். நேர்மையான முறையிலே உள்ளக போட்டிகளை நடாத்தி சிறந்தவர்களை தெரிவு செய்வது அவசியமாகும். அதன் பின் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு திறமையான பயிற்சிகளைக் கொடுத்தல் வேண்டும். சில பாடசாலைகளில் போட்டிகள் எதுவும் நடாத்தப்படுவதில்லை. ஆசிரியர் தம் மனக் கண் முன்னே இருப்பவரை தெரிவு செய்தலும் நடைபெறுகின்றது. இதனால் புதியவர்களுக்கு அல்லது திறமைசாலிகளுக்கு சந்தர்ப்பம் இல்லாது போகின்றது. அதுமட்டுமல்ல தங்கள் மாணவர்கள் வெளியக போட்டிகளில் சோபிக்க முடியாமலும் போய்விடுகின்றது. மேலும் மாணவர் தொடர்ச்சியாகத் தோல்விகளைச் சந்தித்து உளவியல் பிரச்சினைகளுக்கும் உள்ளாகி விடுவர்.

இத்தகைய போட்டிகளில் பங்கு கொள்வதன் மூலம் மாணவர்கள் தம் கல்வியை வீணாக்கி விடுகின்றனர் என்ற கருத்துள்ள பெற்றோரும், ஆசிரியர்களும் உண்டு. இது எவ்வித ஆய்வுக் கண்ணோட்ட முமில்லாத கருத்தாகும். போட்டிகளில் கலந்து கொள்கின்ற மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக அமைகின்றன என்ற கருத்தையே பல ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன. இன்று எமது நாட்டில் கடதாசித்தகைமை உள்ள பலர் வாழ்க்கைத்திறன் அற்றவர்களாக இருக்கின்றனர். ஒரு விடயத்தைப் பற்றி பேசுவதற்கோ அல்லது எழுதுவதற்கோ அல்லது ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்ய முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர். இது எமது பாடசாலைக் கல்வி, பரீட்சைகளில் உள்ள குறைபாடு மட்டுமல்ல, இத்தகையோர் பாடசாலைக் காலத்தில் எவ்வித சாதனையையும் செய்திருக்க மாட்டார்கள் என்பதனையும் அறிய முடியும். இதன் காரணமாகத் தான், கல்வி சீர்திருத்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் ஐந்து தேர்ச்சிகளிலும் இணைப் பாடவிதான செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4. போட்டி நடைமுறை

சுற்று நிருபத்தில் குறிக்கப்பட்டது போன்று குறித்த நேரத்தில் போட்டி ஆரம்பிக்கப்படல் வேண்டும். உதாரணமாக காலை 9.00 மணிக்கு போட்டி நடைபெறும் என குறிக்கப்பட்டிருந்தால், சில சந்தர்ப்பங்களில் அது 11.00 மணிக்கு அல்லது பி.ப.1.00 மணிக்கு ஆரம்பமாகின்ற நிலையும் காணப்படுகின்றது. மாணவர் உரிய நேரத்திற்கு முன்னரே வந்து விட்ட போதிலும் போட்டிகள் தாமதமாகவே தொடங்குகின்றன. இதனால் மாணவர்களின் "புத்துணர்வு" அகன்று அவர்கள் களைத்து

விடுகின்றனர். இதனால் திறமையான மாணவர் கூட சோபிப்பதில்லை. இவ்வாறு தாமதமாக தொடங்குவதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஏற்பாட்டாளர் உரிய நேரத்திற்கு வராமை, இடவசதி இன்மை, புள்ளி பதிவேடுகள் தயாரிக்காமை போன்றவைசிலவாகும். இது ஏற்பாட்டாளரின் திட்டமிடல் குறைபாடேயாகும்.

அடுத்தது போட்டியில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கு பொருத்தமான இடம் ஒதுக்கப்படல் வேண்டும். அவர்கள் படிக்கட்டில், மர நிழலில், அமர்ந்து இருக்கின்ற நிலை உருவாகக் கூடாது. பொருத்தமான ஆசனத்தில், கௌரவ பிரசைகளாக இவர்கள் அமர்ந்திருக்க வழி செய்தல் வேண்டும்.

மாணவர்களை உற்சாகப்படுத்தி, போட்டிகளின் முக்கியத்துவத்தை புரியவைத்து அவர்களுக்கு போதிய பயிற்சி அளித்து அவர்களைப் போட்டிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டியது அதிபர், ஆசிரியர்களின் கடமையாகும். பாடசாலைகளில் உள்ளக மட்டத்தில் அதிகமான போட்டிகளை நடாத்தும் போது, அதிக மாணவர்கள் இனங்காணப்படுவதற்கு வாய்ப்பு அதிகமாகும். "சந்தர்ப்பம் கொடுக்கப்படும் போது சாதனைகள் பிறக்கின்றன" என்ற மாவீரன் நெப்போலியனின் கருத்தையும் "அதிக தடவைகள் பங்கு பற்றும் போது தோல்விகள் குறைக்கப்படுகின்றன" என்ற கருத்தையும் நாம் நினைவு கூரவேண்டும்.

ஒவ்வொருவராக பங்கு கொள்ளும் போட்டியாக இருந்தால், உதாரணமாக பேச்சுப் போட்டி எனில் போட்டி ஒழுங்கு திருவுளச்சீட்டின் மூலமே தெரிவு செய்தல் வேண்டும். ஒரு மாணவர் பேசும் போது ஏனைய மாணவர்களுக்கும் அதனைப் பார்த்துக் கொண்டிருக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னராக எல்லா மாணவர்களையும் ஒன்று கூட்டி போட்டி விதிமுறைகள், புள்ளித்திட்டம் பற்றி மாணவர்களுக்கு தெரியப்படுத்துதல் அவசியமாகும். அப்போது தான் போட்டி முடிவுகளை போட்டியாளர்கள் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ள முடியும்.

பொறுப்பாசிரியர்களைப் போட்டியை பார்வையிடுவதற்கு அனுமதிப்பது சிறந்த நடைமுறையாகும். தனது மாணவரை ஏனைய மாணவர்களுடன் ஒப்பீடு செய்யவும், தனது வழி காட்டலின் தவறுகளை திருத்திக் கொள்ளவும் இதன் மூலம் வாய்ப்புக்கிடைக்கின்றது.

### 5. நடுவர்களைத் தெரிவு செய்தல்

மாணவர் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் முக்கிய பாத்திரம் நடுவர்களாகும். இவர்கள் நீதி தவறாதவர்களாகவும் மாணவர்களாலும் சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அதிகமான போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பு விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது. நடுவர்களின் தகைமை, நடுவர்களிடையே ஒழுங்கமைப்பு இன்மை, நடுவர்களின் பக்கச் சார்பு, ஒரு நடுவர் மற்றைய நடுவர்களை தன் பக்கம் இழுத்தல், நடுவர்களுக்கு மதிப்பீடு செய்யத் தெரியாமை, போன்ற பல குறைபாடுகள் நடைமுறையில் உள்ளன.

நடுவர்களின் தெரிவு மிக முக்கியமாகும். போட்டி எந்த நோக்கத்திற்காக நடாத்தப்படுகின்றதோ, அந்த நோக்கம் எந்தளவு நிறைவேறுகின்றது என்பது இந்த நடுவர்களிலேயே தங்கியுள்ளது.

போட்டி ஏற்பாட்டாளர்கள். மிகவும் பொருத்தமான, துறை சார்ந்தவர்களை நடுவர்களாக முன் கூட்டியே தெரிவு செய்தல் வேண்டும். உதாரணமாக பேச்சுப் போட்டிக்குரிய நடுவராயின், அவர் தன் பாடசாலைக் காலத்திலோ அல்லது தற்பொழுதோ சிறந்த பேச்சாளராக இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவரது தீர்ப்பு நம்பகத் தன்மை உடையதாக இருக்கும்.

குறைந்தது மூன்று நடுவர்களையாவது ஒரு போட்டிக்காக அழைப்பது அவசியமாகும். இருவர் நடுவராக பணியாற்றுவது தீர்மானம் எடுப்பதில் சிக்கலை ஏற்படுத்தும். நடுவர்களின் எண்ணிக்கை ஐந்தாக இருந்தால் இன்னமும் சிறப்பான தீர்வு கிடைக்கப்பெறும்.

நடுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் போது தனி நபரின் மனக்கருத்து ஆதிக்கம் குறைக்கப்படும்.

ஒரு நடுவரின் கருத்து, மற்றவர்களின் கருத்தை பாதிக்கக் கூடாது என்பதற்காக மூன்று நடுவர்களும் வெவ்வேறு இடங்களில் இருத்துவது அவசியமாகும். மூன்று நடுவர்களிடையேயும் சரியான ஒழுங்கமைப்பு இருத்தல் வேண்டும். எதனை, எப்படி, எந்தளவு, அளக்கப் போகின்றோம் என்பதில் மாறாத்தன்மை காணப்படுதல் வேண்டும். இது தொடர்பாக நடுவர்களுக்கு தெளிவான விளக்கத்தைக் கொடுக்க வேண்டியது ஏற்பாட்டாளரின் கடமையாகும். இதற்காக வள ஆளணியினராக துறை சார்ந்த பெரியவர்களை அழைக்க முடியும்.

நடுவர்கள் போட்டி நடைபெறும் போது தங்களுக்குள் கருத்து பரிமாறுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது போட்டியாளரின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தும். நடுவர்களின் முக மாற்றம் கூட போட்டியாளரின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. போட்டி முடிவடைந்தவுடன் மூன்று நடுவர்களும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடுவதும். இதன் மூலம் ஒரு நடுவரின் கருத்தைக் கேட்டு, மற்றையவர்கள் தம் முடிவுகளை மாற்றிக் கொள்வதும் நடைமுறையிலுள்ளன. இதுவும் மிகத் தவறான செயற்பாடாகும். போட்டி முடிவடைந்த பின் ஒவ்வொரு நடுவர்களும் தங்கள் முடிவுகளை ஏற்பாட்டாளரிடம் கொடுத்து விட வேண்டும். அதன் பின்னரே

தங்களுக்குள் கருத்துப் பரிமாற வேண்டும். இறுதியாக நடுவர்களில் ஒருவர் போட்டி தொடர்பான கருத்துக்களையும், மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களையும் முன் வைத்தல் வேண்டும். அப்போது தான் மாணவர் தம் குறைகளை திருத்திக் கொள்ள முடியும்.

### 6. வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல் (மதிப்பீடு செய்தல்)

இந்த விடயமே இக்கட்டுரையின் மையப்பகுதி ஆகும். மூன்று நடுவர்களாலும் (போட்டியாளர்களுக்கு) வழங்கப்பட்ட புள்ளிகளைக் கூட்டி "மொத்தப்புள்ளி" அடிப்படையில் தீர்மானம் எடுக்கும் நடைமுறையே அதிகமாகப் பின்பற்றப்படுகின்றது. இது நீதியானதும், நேர்மையானதுமான தீர்மானம் அல்ல. மொத்தப் புள்ளி அடிப்படையில் தீர்மானம் எடுப்பதானது, தனி ஒரு நடுவரின் அகவயத்தன்மையை அதிகரிக்கச் செய்து, உண்மையான தீர்ப்பை மாற்றமடையச் செய்து விடும். இதன் காரணமாக "நிலை" (**Rank**) அடிப்படையிலே தீர்மானம் எடுத்தல் அவசியமானதாகும். இதனை மேலும் தெளிவுபடுத்த ஒரு உதாரணத்தை இங்கு கருதுவோம்.

ஒரு போட்டிக்கு ஐந்து மாணவர்கள் பங்கு பற்றினர். இவர்களுக்கு மூன்று நடுவர்களும் வழங்கிய புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாணவர் பெயர்கள் | நடுவர் (1) | | நடுவர் (2) | | நடுவர் (3) | |
|---|---|---|---|---|---|---|
| | A | B | A | B | A | B |
| ரமணி | 60 | (4) | 75 | (3) | 44 | (3) |
| கமல் | 68 | (2) | 78 | (1) | 60 | (1) |
| தேவன் | 90 | (1) | 76 | (2) | 58 | (2) |
| ராஜன் | 67 | (3) | 74 | (4) | 41 | (5) |
| அகல்யா | 55 | (5) | 73 | (5) | 42 | (4) |

A = மொத்தப்புள்ளி    B = நிலை

இதன் படி (1) வது நடுவர் தேவன் என்ற மாணவருக்கு மட்டும் அதிக புள்ளிகளை வழங்கியுள்ளார். இவரின் பார்வையில் தேவன் என்பவரே முதன்மையானவராகின்றார். (2) நடுவர் "கமல்" என்ற மாணவரை முதலாவதாக தெரிவு செய்திருக்கும் அதே வேளை அனைவருக்கும் புள்ளிகளை வாரி வழங்கியுள்ளார். (3) வது நடுவரும் "கமல்" என்ற மாணவனை முதலாவதாகத் தெரிவு செய்திருக்கும் அதேவேளை அனைவருக்கும் குறைந்த புள்ளிகளையே கொடுத்துள்ளார்.

சுருக்கமாக எடுத்து நோக்கின் "கமல்" என்பவரை இரு நடுவர்கள் முதலாவதாகவும், தேவன் என்ற மாணவரை ஒரு நடுவர் முதலாவதாகவும் தெரிவு செய்துள்ளனர். அப்படியாயின் .இரு நடுவர்களால் தெரிவு செய்யப்பட்ட "கமல்" என்ற மாணவரே சிறந்த மாணவராக வர வேண்டியவராவார். ஆனால் மொத்தப்புள்ளி அடிப்படையில் தெரிவை மேற்கொள்ளும் போது,

| மாணவர் பெயர்கள் | மொத்தப் புள்ளி | நிலை |
|---|---|---|
| ரமணி | 179 | |
| கமல் | 206 | (2) |
| தேவன் | 224 | (1) |
| ராஜன் | 182 | (3) |
| அகல்யா | 170 | |

இங்கு அதிகூடிய புள்ளிகளை "தேவன்" என்ற மாணவனே, பெறுகின்றான். இதன்படி "தேவன்" என்ற மாணவனே சிறந்த மாணவனாகின்றான். இது தவறான தீர்ப்பாகும். இந்த தவறுக்குக் காரணம் (1) வது நடுவர் தேவனுக்கு தாராளமாக புள்ளிகளை வழங்கியமையேயாகும்.

ஆகவே மொத்தப் புள்ளி அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளக்கூடாது. இதற்காக பின்வரும் முறையைக் கையாளலாம். அதாவது மாணவர்கள் பெற்ற நிலைகள் எல்லாவற்றையும் கூட்டும் போது, அவற்றுள் குறைந்த பெறுமானத்தை பெறுபவரே சிறந்தவராக தெரிவு செய்ய வேண்டியவராவார். மேலுள்ள உதாரணத்தில்

| மாணவர் பெயர் | நிலைகளின் கூட்டுத்தொகை | |
|---|---|---|
| ரமணி | 4 + 3 + 3 = 10 | (03) |
| கமல் | 2 + 1 + 1 = 04 | (01) |
| தேவன் | 1 + 2 + 2 = 05 | (02) |
| ராஜன் | 3 + 4 + 5 = 12 | |
| அகல்யா | 5 + 5 + 4 = 14 | |

இதன் அடிப்படையில் கமல், தேவன், ரமணி ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெறுகின்றனர். இது நேர்மையான தீர்ப்பாகும்.

"இன்றைய மாணவர், நாளைய தலைவர்" என்பதால் இவர்கள் தொடர்பான விடயங்கள் எல்லாவற்றிலும் உண்மையும், நேர்மையும், புதுமையும், இருப்பதே சாலச் சிறந்ததாகும். இதனால் போட்டி ஏற்பாட்டாளர்கள் ஒவ்வொரு விடயத்திலும் ஆழமாக சிந்திப்பது காலத்தின் தேவையாகும். அது மட்டுமல்ல நடுவர்களாக கடமை புரிய செல்கின்றவர்கள், போட்டி தொடர்பாக சகல விடயங்களிலும் தெளிவு பெற்றிருக்க வேண்டும். தங்களின் பிழையான தெரிவு ஒரு எதிர்கால தலைவரை அழித்து விடும் என்பதை மறந்து விடலாகாது.

# உலகமயமாக்கலும் கல்வியும்

சோ. சந்திரசேகரம்
பேராசிரியர் — கல்வியியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

நிறுவனங்கள் பற்றிய ஆய்வாளர்கள் அண்மைக் காலங்களில் நிறுவனங்களின் நோக்கங்கள், அவற்றின் உள்கட்டமைப்பு, அவை இயங்கும் முறைகள், அவற்றின் வெளி உலகச் சூழல் என்பன பற்றியே ஆராய்ந்தனர். அதாவது நிறுவனங்கள் ஒரு காலத்தில் "மூடிய" அமைப்புகளாக கருதப்பட்டன. இத்தகைய ஆய்வு நோக்கு பிற்காலத்தில் மாற்றம் பெற்று நிறுவனங்கள் "திறந்த அமைப்புகளாக" கருதப்பட்டு இந்தப் புதிய அணுகுமுறைக்கேற்ப ஆய்வுகள் செய்யப்பட்டன.

அதாவது நிறுவனங்கள் வெளிக் காரணங்களாலும் சக்திகளாலும் பாதிக்கப்படுகின்றனர். தவிர்க்க முடியாத வகையில் அவற்றின் செல்வாக்குக்கு உட்படுகின்றன. உதாரணமாக இன்றைய கல்வி முறைகள் பற்றிய ஆய்வுகள் இத்தகைய வெளிக்காரணிகள் பற்றியும் கருத்திற் கொள்கின்றன. கல்வி முறைகளைப் பாதிக்கின்ற வெளிக்காரணிகள் பற்றி எழுந்த மானமாகக் கூறுவதாயின் அரசாங்கச் சட்டங்கள் பெற்றோரின் விருப்பங்கள், இலங்கையின் இனப்பிரச்சினை, 1971 களிலும் 1980 களின் இறுதியிலும் ஏற்பட்ட இளைஞர் கிளர்ச்சி, சுனாமி கடல் கோள்கள் என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இக்கட்டுரையில் ஆராயப்படும் இது போன்ற சர்வதேசக் காரணி உலகமயமாக்கல் ஆகும். 1980, 1990 களில் உலகளாவிய நிதி நிறுவனங்களும் மேலைத்தேச வல்லரசுகளும் மிகுந்த ஆர்வத்துடன் பரப்பத் தொடங்கிய உலகமயமாக்கல் சித்தாந்தம் எவ்வாறு வளர்முக நாடுகளின், குறிப்பாக இலங்கையின் கல்வி முறைகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பல்வேறு பொருளாதார, தொழில் நுட்ப, கலாசார, அரசியல் தொடர்புகளின் ஊடாக உலகநாடுகளையும் அங்கு வாழும் மக்களையும் இணைத்து வைத்தல், அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலையை உணர்த்துதல் என்பன உலகமயமாக்கத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

பொருளாதார ரீதியாக நோக்குமிடத்து உலகமயமாக்கல் என்பது தேசிய சந்தைகளை ஒருங்கிணைத்து ஒரு உலக சந்தையை உருவாக்குகின்றது. பொருட்கள் சேவைகள சர்வதேச மூலதனம், நானயம், தொழில் நுட்பம் என்பன எதுவித தங்குதடையுமின்றி நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்யப்படுவது மற்றொரு முக்கிய அம்சம்.

## உலகமயமாக்கலின் பிரதான அம்சங்கள்

பல்வேறு பொருளாதார, தொழில்நுட்ப, கலாசார, அரசியல் தொடர்புகளின் ஊடாக உலகநாடுகளையும் அங்கு வாழும் மக்களையும் இணைத்து வைத்தல், அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலையை உணர்த்துதல் என்பன உலகமயமாக்கத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

பொருளாதார ரீதியாக நோக்குமிடத்து உலகமயமாக்கல் என்பது தேசிய சந்தைகளை ஒருங்கிணைத்து ஒரு உலக சந்தையை உருவாக்குகின்றது. பொருட்கள், சேவைகள் சர்வதேச மூலதனம், நானயம், தொழில்நுட்பம் என்பன எதுவித தங்குதடையுமின்றி நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்யப்படுவது மற்றொரு முக்கிய அம்சம்.

பொருளுற்பத்தி, வர்த்தகம், முதலீடு என்பன தேசிய எல்லைகளைக் கடந்து உலகெங்கும் பரவி சர்வதேசமயப்படுவதும் அதனால் உற்பத்திச் செலவுகள், இலாபங்கள் என்பவற்றில் சாதகநிலை ஏற்படுவதும் மற்றொரு முக்கிய அம்சமாகும்.

அரசியல் ரீதியாக நோக்குமிடத்து உலகமயமாக்கலின் விளைவாக மனித உரிமைகள், சனநாயகப் பண்புகள், அடிப்படை சுதந்திரங்கள், பாலின சமத்துவம் (gender equality)

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆளுகையில் வெளிப்படைத்தன்மை (transparancy) என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

சமூக ரீதியாக நோக்குமிடத்து இன்று உலகளாவிய ரீதியில் ஆங்கிலம் ஒரு பிரதான மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. வளர்முக நாடுகள் மட்டுமன்றி ஆங்கில மொழிக்கு ஈடான வளமிக்க மொழிகளைக் கொண்ட ஐரோப்பிய மற்றும் தூர கிழக்கு நாடுகளிலும் இன்று ஆங்கில மொழி முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

அத்துடன் கலாசார ரீதியாக மேலைநாட்டு இசை, துரித உணவு, ஆடை அலங்காரங்கள், திரைப்படங்கள் மற்றும் நவீன வாழ்க்கைப் பாணிகள் பல்வேறு ஊடகங்களுக்கூடாக குக்கிராமங்களையும் சென்றடைந்து வருவதும் உலகமயமாக்கலின் ஒரு முக்கிய அம்சமாகும். பொதுவாக இத்தகைய உலக மயமாக்கல் சக்திகள் மேற்கத்திய கைத்தொழில் நாடுகளில் இருந்து வளர்முக நாடுகளை நோக்கிச் செல்வாக்குச் செலுத்துவதும் வளர்முக நாடுகளை உலகமயமாக்கல் கட்டமைப்புக்குள் கவர்ந்திழுப்பதும் ஒரு வகையான ஒரு வழிப்போக்காகவே நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

அதாவது மேலைநாட்டு மூலதனம், தொழில்நுட்பம், கலாசாரம், தனிமனிதத் துவத்தை வலியுறுத்தும் வாழ்க்கைப்பாணி என்னும் அம்சங்கள் வளர்முக நாடுகளை இன்று ஊடுருவி வருகின்றன. சுருங்கக் கூறின், உலக நாடுகளின் பொருளாதார, கலாசார, அரசியல் மற்றும் சித்தாந்த அமைப்புகளில் ஒரு வகையான மேற்கு நாட்டுப் பாணியிலான ஒருமைப்பாடு ஏற்பட்டு வருவது உலகமயமாக்கலின் ஒரு முக்கிய விளைவு என்பதை மனங் கொள்ளல் வேண்டும்.

## வளர்முகநாடுகளில் கல்வி முறையன் சில அம்சங்கள்

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் வளர்முக நாடுகளின் கல்வி முறைகள் ஆட்சியாளர்களின் தாய் நாட்டின் மேம்பாடு நோக்கியனவாக இருந்த விடத்து, சுதந்திரம் அடைந்த நாடுகள் தமது சமூகப் பொருளாதார அபிவிருத்தி நோக்கி கல்வி முறையில் பல்வேறு சீர்திருத்தங்களை அறிமுகம் செய்ய முற்பட்டன.

வளர்முக நாடுகள் கல்வி முறைகளில் காணப்பட்ட காலனித்துவ அம்சங்களை முற்றாக அகற்றி அவற்றின் தேசிய மற்றும் உள்ளூர் கலாசார அம்சங்களை அறிமுகம் செய்ய முற்பட்டனர். அதாவது தமது நாடுகளின் சமூகப் பொருளாதார நிலைமைகள், தேவைகள், சவால்கள் என்பவற்றுக்கேற்ற "தேசிய கல்வி முறைகள்" உருவாக்க அவை முற்பட்டன.

உள்நாட்டு வரலாறு சுதேசிய சமயங்கள், தாய்மொழிக்கல்வி, உள்ளூர் தொழில்கள், அவை தொடர்பான திறன்களும் பயிற்சிகளும், உள்ளூர் இலக்கியம், கலை மற்றும் நடனம், இசை முதலாம் அம்சங்களைக் கொண்ட அழகியல் கல்வி என்பன கல்வி முறையில் முக்கியத்துவம் பெற்றன.

இலங்கை போன்ற நாடுகளில் ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக் கொண்ட பாடசாலைகள் படிப்படியாக விஞ்ஞானம் / கணிதம் உட்பட சகல பாடங்களையும் தாய்மொழிகளில் கற்பிக்கத் தொடங்கின. பல்கலைக்கழகங்களிலும் தாய்மொழிக் கல்வி விரிவு செய்யப்பட்டு பெரும் பாலான மாணவர்களைக் கொண்ட கலை மற்றும் சமூக அறிவியல் பீடங்கள் பட்டப்படிப்பு, பின்பட்டப்படிப்பு என்பவற்றில் தாய்மொழியையே பயிற்று மொழியாகக் கொள்ளத் தொடங்கின.

ஆங்கிலமொழி பாடசாலை மட்டத்தில் சில ஆண்டுகளுக்கு மட்டுமே ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டது. ஆங்கிலமொழி அறிவின்றியே அரசாங்கப் பதவிகளைப் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டமையால் ஆங்கிலத்தின் முக்கித்துவம் வெகுவாகக் குறைந்தது.

பல வளர்முக நாடுகளில் தேசிய கல்வி முறைகளை உருவாக்கும் நோக்கு பெரும் முக்கியத்துவம் பெற்றமையால் "அரசாங்கக் கல்வி முறை" ஒன்று உருவாக்கப்பட்டது. கிறிஸ்தவ மிசனரிமாரினதும் தனியார்துறையினரதும் கல்வி நிறுவனங்கள் முக்கியத்துவம் இழந்தன. இலங்கை போன்ற நாடுகளில் இப் பாடசாலைகளில் பெரும்பாலானவை அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. மிச்சசொச்சமாக இருந்த தனியார் பாடசாலைகளும் அரசாங்கப்பாட ஏற்பாட்டுக்கு அமையவே கல்வியை வழங்க வேண்டிதாயிற்று. இலங்கையில் சகல பாடங்களுக்குமான பாடநூல்களை அரசாங்கமே தயாரித்து இலவசமாக விநியோகித்தது. கல்வி முறைமையின் சீர்திருத்தங்களில் கல்வியின் சமவாய்ப்புகள், நியாயத்தன்மை என்பவற்றைப் பேணவும் விரிவு செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பின் தங்கிய வகுப்பினருக்கான கல்வி வாய்ப்புகள், கல்வி ஏற்பாடுகள் என்பனவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பல வளர்முக நாடுகளில் தேசிய கல்வி முறைகளை உருவாக்கும் நோக்கு பெரும் முக்கியத்துவம் பெற்றமையால் "அரசாங்கக் கல்வி முறை" ஒன்று உருவாக்கப்பட்டது. கிறிஸ்தவ மிசனரிமாரினதும் தனியார் துறையினரதும் கல்வி நிறுவனங்கள் முக்கியத்துவம் இழந்தன. இலங்கை போன்ற நாடுகளில் இப் பாடசாலைகளில் பெரும்பாலானவை அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. மிச்சசொச்சமாக இருந்த தனியார் பாடசாலைகளும் அரசாங்கப்பாட ஏற்பாட்டுக்கு அமையவே கல்வியை வழங்க வேண்டிதாயிற்று.

உதாரணமாக இந்தியாவில் பின் தங்கிய சாதியினருக்கென புதிய கல்விக் கொள்கைகள், புலமைப் பரிசில்கள் கிராமப்புற பாடசாலை விருத்தி முதலாம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உலகமயமாக்கல் என்பது ஒரு வகையில் அறிவை மையமாகக் கொண்ட பொருளாதார முறையின் தோற்றத்தையும் கருதும். இத்தகைய பொருளாதார முறைமையுள் இணைந்து கொள்ள சகலரும் கல்வி பெற வேண்டிய அவசிய நிலை ஒன்று உருவாகியுள்ளது. அறிவைப் பெற்றவர்கள் முன்னேறிச் செல்ல அதனைப் பெறாதவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் வாழ வேண்டிவரும் என்பதை மேற்கு நாடுகளும் கிழக்கு நாடுகளும் தற்போது நன்கு புரிந்து கொண்டுள்ளன.

## உலகமயமாக்கலும் கல்வியும்

உலகமயமாக்கல் வளர்முக நாடுகளின் பொருளாதார முறைகளில் ஏற்படுத்தி வருகின்றன. நேரடியான தாக்கங்கள் பற்றி திட்ட வட்டமாக உணரப்பட்டிருக்கிறது. உதாரணமாக இலங்கையில் 1960 / 70 களில் உறுதியாக பின்பற்றப்பட்டு வந்த சமூக உடைமைப் பொருள்தாரக் கொள்கைகள் ஏறத்தாழ கைவிடப்பட்டு பொருளாதார முறைமை தாராளமயப்படுத்தப்பட்டது. தனியார் துறை மீதிருந்த பல்வேறு கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி தனியார் துறையிலேயே தங்கியிருக்கிறது என்பது கொள்கை ரீதியாக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வெளிநாட்டு செலாவணி வெளிநாட்டு மூலதனம் என்பவை மீதிருந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டு இலங்கையின் பொருளாதார முறை உலகப் பொருளாதார முறையுடன் இணைக்கப்படலாயிற்று. இந்தக் கொள்கைகள் கல்வித்துறையின் மீதும் பல முக்கியத்துவம் வாய்ந்த தாக்கங்களை ஏற்படுத்தின.

உலகமயமாக்கமானது இலங்கையின் கல்வி முறையைப் பொறுத்தவரையில் ஏற்படுத்திய சில சாதகமான தாக்கங்களை நோக்குதல் வேண்டும்.

உலகமயமாக்கல் என்பது ஒருவகையில் அறிவை மையமாகக் கொண்ட பொருளாதார முறையின் தோற்றத்தையும் கருதும். இத்தகைய பொருளாதார முறைமையுள் இணைந்து கொள்ள சகலரும் கல்வி பெற வேண்டிய அவசிய நிலை ஒன்று உருவாகியுள்ளது. அறிவைப் பெற்றவர்கள் முன்னேறிச் செல்ல அதனைப் பெறாதவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் வாழ வேண்டிவரும் என்பதை மேற்கு நாடுகளும் கிழக்கு நாடுகளும் தற்போது நன்கு புரிந்து கொண்டுள்ளன.

தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடியின் விளைவாக, உலகமயமாக்கலின் சக்திகளை சரிவரப் புரிந்து கொள்ளாது விடின் அவை இந்நாடுகளை அழித்துவிடும் என்னும் விடயங்களும் உணரப்பட்டு வருகின்றது.

உலகமயமாக்கலானது செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடைவெளியை மேலும் விரிவாக்கும் என்பது ஆதாரபூர்வமாக இன்று நிரூபிக்கப்பட்டு வருவதால், இந்த இடைவெளியை அகற்றுவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயப்பட்டு வருகின்றன.

பிரதானமான ஒரு உபாயமாக சிங்கப்பூர், தைவான் போன்ற நாடுகள் பல்வேறு கல்வி முறை சீர்திருத்தங்கள் ஊடாக உலகமயமாக்கலின் பாதகமான விளைவுகளில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முயன்று வருகின்றன. குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் சிறந்த கல்விமுறை, திறமைமிக்க அரசாட்சி என்னும் வழிமுறைகள் ஊடாக, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளை விட சிறந்த முறையில் முன்னர் கூறிய நிதி நெருக்கடியில் இருந்து தப்பிப் பிழைக்க முடிந்தது.

சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் விளைவாக மனிதப் பண்பியல் துறை, கலைத்துறைப் பள்ளிகள், விஞ்ஞானப் பள்ளிகள் என்பன மூடப்பட்டு கல்வியியல் துறையில் செலுத்தப்பட்ட அக்கறை மேலும் குறிப்பிடத்தக்கது. அதாவது புதிய நூற்றாண்டில் புதிய உலகமயமாக்கல் சூழ்நிலையில் எதனைக் கற்பிக்க வேண்டும்? எவ்வாறு கற்பிக்க வேண்டுமா? மாணவர்கள் எவ்வாறு கற்க வேண்டும்? என்றும் விடயங்களில் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதாவது புதிய பொருளாதார சூழலில் கல்வியியல் பெற்று வருகிற முக்கியத்துவத்தையும் அதன் காரணமாக ஆசிரியர்களின் கல்விப்பணி பெற்றுவரும் புதிய முக்கியத்துவத்தையும் இவ்விடத்து வலியுறுத்திக்கூற வேண்டும்.

உலகமயமாக்கலின் கெடுதியான தாக்கங்களில் இருந்து விடுபட சிங்கப்பூர் கல்வித்துறைக்கான அரசாங்க ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. உலகமயமாக்கல் ஏற்படுத்தி வரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளவே இந்த நடவடிக்கை என்று அரசாங்கத் தலைவர்கள் கூறுகின்றனர். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு கணினியை வழங்குவது அவர்களுடைய நோக்கம். அதே நேரம் புதிய பொருளாதார முறையில் தொடர்பும் வேகமும் முக்கியத்துவம் பெற்று வருவதால் முழு நாடும் கணினி ரீதியாக ஒன்றிணைக்கப்பட்டு பாடசாலை முறையும் அவ்வொன்றிணைப்புக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்பது சிங்கப்பூர் தலைவர்களின் பிரதான கல்விசார் நடவடிக்கை ஆகும்.

கணினியை மையமாகக் கொண்ட கல்விப் போதனை, நவீன கணினிகளை மையமாகக் கொண்ட

வகுப்பறைகளில் தகவல் தொழில் நுட்பக் கல்வியறிவையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள இணையத்தள வசதி: இவை அனைத்தும் உலகமயமாக்கலின் விளைவாக சிங்கப்பூர் மக்களும் பிள்ளைகளும் பெற்றுவரும் கல்விசார் நன்மைகள் ஆகும். அதேவேளையில் எவ்வாறு எதிர்காலவியல் நோக்கில் சிங்கப்பூர் போன்ற அரசுகள் உல்கமயமாக்கலின் பாதிப்புகளை எதிர்கொள்ள தம்மை ஆயத்தம் செய்து வருகின்றன என்பதையும் இதனால் புரிந்து கொள்ள முடியும்.

உலகமயமாக்கலின் மற்றொரு அம்சம் யாதெனில் அதில் வளர்முக நாடுகளில் மக்கள் அனைவரதும் பங்கேற்பு ஆகும். இந்தப் பங்கேற்பை உறுதி செய்ய அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் தகவல் தொழில் நுட்பக்கல்வி என்ற ஒரு கட்டாய நிலைமை உருவாகி வருகிறது.

எடுத்துக் காட்டாக, இந்தியாவின் சகல கிராமங்களில் சமுதாயக்கணினி நிலையங்கள் ஏற்படுத்தும் கொள்கை, இந்தோனேசியாவில் பெண்களை புதிய பொருளாதார நிலைமைக்கு ஏற்ப இணங்கச் செய்யும் முயற்சிகள், இலங்கையின் சகல பாடசாலைகளிலும் கணினி நிலையங்கள் என்னும் கொள்கை போன்றவற்றை எடுத்துக்கூற முடியும். இந்தோனேசியாவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பல்தேசியக் கம்பனிகளின் கைத்தொழில் நிலையங்களில் பணிபுரிவதற்கு தேவையான பல்வேறு திறன்களை பெண்களுக்கு வழங்கும் முயற்சிகளில் அந்நாட்டுத் தொண்டர் நிறுவனங்களும் பெண் சமூகவியலாளர்களும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதை இவ்விடத்து குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

உலகமயமாக்கலின் விளைவாக இன்று இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் T என்று கூறப்படுகின்ற தகவல் தொடர்பாடல் கைத்தொழில் யாவும் கல்வித்துறையில் தீவிர மாற்றங்களை அவசிப்படுத்துகின்றன.

இத்தகைய கைத்தொழிலில் இணைந்து கொள்ள மனிதவலுவை ஆயிரக்கணக்கில் பயிற்றும் வகையில் பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில் நுட்பக் கல்வி முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இதனால் இணையமானது அதிமுக்கியத்துவம் வாய்ந்த தகவல் மூலாதாரமாக விளங்குகிறது.

இணையத்தையும் அதன் தகவல் மூலாதாரங்கள், கலைக் களஞ்சியங்கள், தரவுத்தளங்கள் என்பவற்றைப் பயன்படுத்த முடியாதவர்கள் உலகில் நடப்பவற்றை தெரியாதவர்களாய், நவீன அறிவிலிகளாக மாறும் நிலையில் மாணவர்களுக்கு மட்டுமன்றி "யாவருக்கும் கணினிக்கல்வி" என்னும் கொள்கை முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

இன்று பாடசாலை மாணவர்களுக்கு அப்பால் பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களை, பத்திரிகையாளர்கள், அரசாங்க ஊழியர்கள், காவல்துறையினர் என பல தரப்பட்டவர்களுக்கும் தகவல் தொழில் நுட்பக் கல்வி விரிவுபடுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

16ம் நூற்றாண்டில் அச்சுயந்திரக் கண்டுபிடிப்பு ஏற்படுத்திய கல்விப் புரட்சிக்கு அடுத்த படியாக கணினியின் கண்டுபிடிப்பும் உலகமயமாக்கலும் மற்றொரு கல்விப் புரட்சிக்கு வித்திட்டு வருவதாக கல்வி வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

உலகமயமாக்கமும் கணினின் தொடர்புகளில் ஏற்படுத்தி வரும் மற்றொரு சாதக நிலைமை மாணவர்களின் கல்வியில் ஏற்படுத்திவரும் "உலகமய மாக்கல்" ஆகும். அதாவது வீடியோ மாநாட்டு முறையின் ஊடாக எந்தப் பல்கலைக்கழக மாணவர்களும் உலகளாவிய ரீதியில் புகழ்மிக்க வேற்று நாட்டு பேராசிரியர்களின் விரிவுரைகளை கேட்டறிய முடியும். முழு உலகமும் "ஒரு பல்கலைக்கழக வளாகமாகவும் "ஒரு" வகுப்பறையாக மாறிவருகின்ற நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

சிங்கப்பூர் பல்கலைக் கழகங்களில் உள்ள பேராசிரியர்கள் ஆசிய நாடுகளில் எவ்வாறு வர்த்தகம் செய்வது என்ற தலைப்பில் ஆற்றுகின்ற விரிவுரைகளை ஐக்கிய அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ள வணிகவியல் கல்லூரிகளில் மாணவர்கள் கேட்டறிந்து பயன் அடைகின்றனர்.

இப்பின்புலத்தில் உலகமயமாக்கலின் விளைவாக வளர்முகநாடுகள் தமது கல்விமுறைகளின் செயல்திறனை அதிகரிக்க வேண்டிய தொரு அத்தியாவசிய நிலை தோன்றியுள்ளது. உலகமயமாக்கப்பட்ட சூழலில் ஒவ்வொரு நாடும் தனது போட்டித் தன்மையை வலுப்படுத்திக்கொள்ள கல்வி முறைகளை செம்மைப்படுத்த வேண்டியுள்ளது.

செலாவணிக் கட்டுப்பாடு நீக்கப்பட்டமையால் வளர்முகநாடுகளில்

> உலகமயமாக்கலின் கெடுதியான தாக்கங்களில் இருந்து விடுபட சிங்கப்பூர் கல்வித்துறைக்கான அரசாங்க ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. உலகமயமாக்கல் ஏற்படுத்தி வரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளவே இந்த நடவடிக்கை என்று அரசாங்கத்தலைவர்கள் கூறுகின்றனர்.
>
> ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு கணினியை வழங்குவது அவர்களுடைய நோக்கம். அதே நேரம் புதிய பொருளாதார முறையில் தொடர்பும் வேகமும் முக்கியத்துவம் பெற்று வருவதால் முழு நாடும் கணினி ரீதியாக ஒன்றிணைக்கப்பட்டு பாடசாலை முறையும் அவ்வொன்றிணைப்புக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்பது சிங்கப்பூர் தலைவர்களின் பிரதான கல்விசார் நடவடிக்கை ஆகும்.

மாணவர்கள் வெளிநாடுகளில் பயிலும் வாய்ப்பும் கிட்டியுள்ளது. புகழ் பெற்ற மேலை நாட்டுப் பல்கலைக்கழகங்கள் வளர்முகநாடுகளில் வளாகங்களை அமைத்து கல்விச் சேவையை உள்ளூர் மட்டத்தில் வழங்கும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இத்துறையில் இன்று மலேசியா முன்னணியில் நிற்கிறது. கனடா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் மலேசியாவில் தமது வளாகங்களை அமைத்து தென்னாசிய தென்கிழக்காசிய நாடுகளின் மாணவர்களுக்கு சார்பளவில் குறைந்த செலவில் உயர் கல்வியை வழங்கி வருகின்றன.

இன்று விரிவுபடுத்தப்படும் இணையப் பல்கலைக்கழகங்கள் ஊடாக சொந்த நாட்டில் இருந்து கொண்டே மேலை நாட்டுக் கல்வியைப் பெறும் வாய்ப்புகள் மிகுந்து வருகின்றன.

## பாதகமான விளைவுகள்

உலகமயமாக்கலின் இரு முக்கிய விளைவுகளை இவ்விடத்து குறிப்பிட வேண்டும். இதில் ஒன்று, பெறுமானங்கள் பற்றியது. எவருடைய எந்த நாட்டின், எக் கலாசாரத்தின் பெறுமானங்கள் இன்று ஊடகங்கள் ஊடாக உலகமயமாக்கலின் பெயரில் பரப்பப்பட்டு வருகின்றன?

வளர்முக நாடுகளில் இளைஞர்கள் இணையத் தளங்களை நாடும் பொழுது மேலைத்தேச விழுமியங்கள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்க கலாசார பெறுமானங்களின் செல்வாக்குக்கு உட்பட நேரிடுகிறது. ஒரு இணையத் தளத்திலிருந்து இன்னொரு இணையத் தளத்துக்கு மாறி மாறிச் செல்லும் பொழுது அவர்கள் பெறும் அறிவுத் தொகுதி தொடர்பற்றதாகவும் துண்டாடப்பட்டதாகவும்; பாடசாலைக்கல்வி போன்று முறைப்படுத்தப்படாமல் இருக்கும் பொழுது மாணவர்கள் அதிக பயனடைவதற்கு இல்லையென்றும்; குமரப்பருவ மாணவர்கள் "வழிகாட்டல் அற்றகற்றலை" கைக்கொள்ளும் நிலையே ஏற்படும் என்ற வலுவான வாதம் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது.

மேலும் இணையத் தளங்கள் ஊடாக கிடைக்கப்பெறும் தகவல்கள் அறிவாக மாற்றப்பட வேண்டும். அவ்வறிவு வாழ்க்கையில் பயனுள்ள அறிவாக உருமாற்றப்பெற வேண்டும். இந்த முறையில் நோக்குமிடத்து இணையத் தளங்கள் அந்தளவிற்கு உதவுமா? என்ற ஐயமும் முன்வைக்கப்படுகிறது.

உலகமயமாக்கலின் விளவாக முக்கியத்துவம் பெற்றுவரும் கணினிக் கல்வியானது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த மனித அம்சத்தை ஒழித்துக்கட்டும் என்ற பீதியும் பொருளற்றதன்று. அறிவின் உருவாக்கம் பற்றி ஆராய்ந்த சமூகவியல் ஆய்வாளர்கள் கல்வி அறிவினை மனிதன் மற்றொரு மனிதனிடமிருந்து தான் பெற்றுக்கொள்ள முடியும். சகல அறிவும் தலைமுறை தலைமுறையாக மனிதர்களும் கூடாகத் தான் புதிய தலைமுறையினரிடம் கையளிக்கப்பட்டு வந்தது என்ற முறையில், கல்வி அறிவை ஒரு சமூக ரீதியான படைப்பு என்று சமூகவியலாளர்கள் விளக்கியுள்ளனர். இந்த அம்சம் கல்வி அறிவுக்கு மட்டுமன்றி மனிதர்கள் பெற்றுக் கொள்ளும் வாழ்க்கைப் பெறுமானங்கள், மனித நேசப்பண்புகள் என்பவற்றுக்கும் பொருந்தும்.

இன்று வளர்முக நாடுகளில் காணப்படும் சமூகங்கள் மத்தியில் பேணப்பட்டு வரும் குறைந்தபட்ச அமைதி, இறுக்கமான குடும்ப வாழ்க்கை, சமூகக்கட்டுக்கோப்பு சமூக உறுதிப்பாடு என்பவற்றுக்கு இளந்தலைமுறையினர் தமது முன்னோரிடம் இருந்து பெற்று வந்த வாழ்க்கைப் பெறுமானங்களும் சமயப் பெறுமானங்கள் காரணமாகவும் அமைந்தன. புதிய இணையத்தளங்கள் ஊடாகப் பெறப்படும் பல்கலைக்கழக் கல்வி தனியாள் மயப்படுத்தப்பட்ட கல்வி என்னும் புதிய முறையான கல்விச் செயற்பாடுகள் மேற்கூறிய மனித மற்றும் சமூக அம்சத்தை இல்லாதொழித்து விட்டால் அதன் சமூக விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என்பதை பல வளர்முக நாடுகளின் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

தொடரும்....

பெண் கல்வி என்ற சிந்தனை என்று முதன் முதலில் பேசப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை, அரசியல் சமூக அமைப்புகள் அனைத்தும் இதனை சமூக அமைப்புக்கு பாதகம் ஏற்படாத வகையில் சிலை அளவு கோல்களால் வரையறுக்கப்படும் பிரத்தியேக அவசரத்தேவையாகவே கருதினர். பிரிட்டிஷ் இந்தியாவில் ஆரம்பகால தேசியம் கல்வியின் மூலம் ஓர் பெண் உதாரண மனைவி மற்றும் தாயாக விளங்குவாள் என்றும் அதன் மூலம் சமூக குடும்பக் கட்டுக்கோப்புகளின் காப்பாளராகப் பயனாற்றுவாள் என்றும் எண்ணியே ஆதரவு அளித்தது. சமீப காலங்களில் பெண் கல்வியின் மூலம் அடுத்த தலைமுறை கல்வி பெற்றதாக விளங்கும் திட்டமிட்ட குடும்பங்கள் தோன்றும் என்றே நியாயப்படுத்தப்படுகின்றன. இவற்றின் உண்மை என்னவெனில் சமூகத்தில் பெண்களின் கீழ்நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாமல் வேறு ஏதோ ஒரு உள்நோக்கத்தை வெற்றி பெறச் செய்யும் கருவியாக பெண்கல்வி அவசியம் என்று தொடர்ந்து பேசப்படுகிறது.

***மாலினி பட்டாச்சார்யா "கரும்பலகைக்குப் பின்னால் கல்வி பற்றிய தற்காலப்பார்வை" தொகுதி 5, 2003, பக் 83.***

**உரையாடல்**

# தொழில் ஆசிரியம் தான் என்று முடிவானால்...



யாழ்ப்பாணக் கல்விச் சூழலில் நன்கு அறியப்பட்ட ஆசிரியர் க. சிவராமலிங்கம். குறிப்பாக யாழ். இந்துக் கல்லூரி மரபு வழி வந்த ஆசிரியர் குழாமில் வித்தியாசமானவர், தனித்துவமானவர். பாடசாலைச் சமூகத்துக்கு அப்பாலும் தனது பணிகளால் நிறைவு கண்டவர், காண்பவர். சிவராமலிங்கம் "சேர்" வழிவந்த மாணவர் பரம்பரை நீண்டது. இன்று அந்த மாணவர்களில் பலர் பல்வேறு துறைகளில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவராமலிங்கம் சேரின் மொழிப்புலமை, இலக்கியம் கற்பிக்கும் பாங்கு, சமூக சமய விவகாரங்கள் பற்றிய ஆழ்ந்த புலமை, தத்துவ விசாரம், சொற் பொழிவு நிகழ்த்தும் அழகும் ஆழமும்... இப்படி அவரது சிறப்புகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இத்தகைய அனுபவ ஆளுமைச் சிற்பியுடன் அக விழிக்காக ஓர் நீண்ட செவ்வியை எழுத்தாளர் க. சட்டநாதனும் மதுசூத னனும் மேற்கொண்டார்கள். இந்த இருவரும் கூட அவரது மாணவர்கள்தான்.

(ஆ—ர்)

(சென்ற இதழின் தொடர்ச்சி......)

ஒரு நாள், அரசியல் விஞ்ஞான விரிவுரையின் போது காந்தியடிகளின் "இராமராச்சியம்" விமர்ச்சிக்கப்பட்டது. கருத்துகள் கசந்தன. எழுந்தேன். கம்பனை வைத்துக் கொண்டு பேராசிரியர் கருத்தை முட்டினேன். சிரித்தப்படி அவரும் என்னைச் சாடினார். இராமராச்சியம் ஒரு கற்பனாவாதச் சிந்தனை என்றார். நானும் விடவில்லை. "காந்தியடிகளின் அகிம்சைப் போராட்டத்தையும் அப்படித்தான் சிலர் விமர்சித்தார்கள். இன்று அது நடைமுறைச் சாத்தியமாகவில்லையா sir" என்று கேட்டேன்

"Fine. I accept" - விரிவுரை நிறைவுற்றது.

நண்பர்கள் என்னைக் கண்டித்தார்கள். "ஏன் சேர் மலையோட மோதுறீங்க?" என்றனர். எனக்கு ஒரே கலக்கம். மாலை தயக்கத்துடன் அவர் வீடு சென்றேன்.

மாமனிதன் என்னை வரவேற்றதையும் உற்சாகப்படுத்தியதையும் இன்று நினைத்தாலும் நெஞ்சு நெகிழ்கிறது. இவையன்றோ ஆசிரிய வாண்மை. ஆளுமை. இப் பாணியையே என் ஆசிரிய வாழ்க்கையிலும் கைக் கொண்டேன். வெற்றிபெற்றேன் என்றே நம்புகிறேன்.

**நீங்கள் ஆசிரியதொழிலை தேர்ந்தெடுத்தமைக்கான விசேட காரணங்கள் ஏதாவது உண்டா?**

இல்லை ஆசிரியத் தொழிலை நான் தேர்ந்தெடுத்தேன் என்று சொல்வது பொய். 50 களில் ஆசிரியத் தொழில் அதிலும் யாழ் / இந்துக்கல்லூரியில் ஆசிரியத் தொழில் கவர்ச்சியானது தான். இருந்தும் ஏதாவது ஓர் அரச உத்தியோகம் கிடைத்தால் அதிகாரம் செலுத்தும் பதவிக்கு உயரலாம் என்ற நப்பாசை இருந்ததை மறுக்க மாட்டேன். விதானை, உடையார் பதவிகளை, என் முன்னோர் வகித்தவர்கள். அந்தப் பித்தாகவும் இருந்திருக்கலாம். குறைந்தபட்சம் ஒரு D.R.O வாக உயரலாம் என்று நினைத்ததுண்டு.

ஆனால் விதிகுறுக்கிட்டது. ஆசிரியராகவே இரு என்று கட்டளை இட்டது. கட்டளையை ஏற்றேன். என்னை ஆசிரியனாக்கிக் கொண்டேன். இன்றும் ஆசிரியனாகவே வாழ்கிறேன். அதில் மிக மகிழ்ச்சியும் அடைகிறேன். ஆசிரியனாக எத்தனை மாணவ மணிகளை சந்தித்து விட்டேன். இது வாழ்வின் பெரும் பயன் என்றே கருதுகிறேன்.

**நீங்கள் ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற பாடசாலை எது. அப்பாடசாலைக்கல்விச் சமூகம் பற்றிய உங்களது மனப்பதிவுகளை பகிர்ந்து கொள்ளுங்கள்.?**

முதல் நியமனமென்ன. முழு நியமனமும் யாழ் / இந்துக் கல்லூரிதான். இடையில் திகதி நினைவில்லை - இரத்தினபுரிக்கு மாற்றம் போட்டார்கள். இது நாடளாவிய மாற்றம். பேப்பரோடு நின்று விட்டது.

அப்போது கல்வி அமைச்சின் துணைச் செயலராக இருந்த திரு கமகே என்பவரை நேரே கண்டேன். கல்வி அமைச்சில் பணிபுரிந்த என் வகுப்புத் தோழர் ஒருவர் உதவினார்.

இரண்டே மணித்தியாலங்களில் மாற்ற உத்தரவை ரத்துச் செய்த ஆவணங்களுடன் யாழ். திரும்பினேன். யாழ்.. இந்துவுடன் சங்கமமாகினேன். அன்றய யாழ் / இந்துச்சமூகத்தை சமூகம் என்று விழிப்பதிலும் பார்க்க ஒரு கூட்டுக் குடும்பம் என்று சொல்வதே பொருத்தமானது.

எந்தப்பக்கம் திரும்பினாலும், என் ஆசிரியர்கள் நண்பர்கள் அயலவர்களே. நான்கு ஆண்டுகட்கு முன் நெருக்கமாகப் பழகியவர்கள். மாணவர்களோ, அன்பும், அடக்கமும் நிறைந்தவர்கள். ஒரு சில பிரளிக்காரர் இருந்தவர்கள் தான். அவர்களும் அன்புக்கு அடி பணிந்தவர்கள்.

ஐயம் தெழிவிக்க என் ஆசிரியர்கள். ஆற்றுப்படுத்த என் அதிபர்கள். கல்வி அதிகாரிகளின் கடும் போக்கை கட்டுப்படுத்திக் காக்க அதிபர்களின் ஆற்றல், ஆளுமை, அறிவுத்திறன். யாழ் / இந்து ஒரு கல்லூரி அல்ல. அது அன்று ஒரு பல்கலைக்கழகம். துறை போகக் கற்ற ஆசான்களின் கோட்டை. யாழ் / இந்துக் கல்லூரி நினைக்க இனிக்கும் 35 வருட ஆசிரிய சேவை யார் பெறுவர் அச்சேவை"

**உங்களது பட்ட முதன்மைப் பாடமாக பொருளாதாரம் இருந்த போதும், தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றைக் கற்பிக்கும் பாடங்களாக நீங்கள் தெரிவு செய்தமைக்கான சிறப்பான காரணங்கள் ஏதாவது உண்டா?**

இங்கு தான் சிக்கல் - நான் தெரிவு செய்யவில்லை திணிக்கப்பட்டது என்று சொல்லலாம். முதற் காரணம் அன்றைய பாடத்திட்டத்தில் யாழ் / இந்துவில் H.S.C வகுப்பில் பொருளியல் ஒரு பாடமாக இருக்கவில்லை. அடுத்தது நான் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருந்த போதும், என்னை அண்ணாமலை பட்டதாரி என்றே பொதுவாக எண்ணினார்கள்.

நான் கற்பிக்கத் தொடங்கிய அடுத்த வருடமே H.S.C வகுப்புக்கு தமிழ் கற்பித்த வித்துவான் க. கார்த்திகேசு BA (London Dip-in - Ed) பயில கொழும்பு சென்றார். அவரின் Time Table பெரும் பகுதி எனக்கானது.

சிறிது தயக்க மிருந்த போதும் துணிவுடன் வகுப்பறைகளுள் நுழைந்தேன். என் பல்கலைக்கழகக் கல்வியின் போது பெற்ற, தேடிக்கொண்டவையும் மேலாக பாட அணுகுமுறையும் பாடப் போதின் இறுதி ஐந்து நிமிடங்கள் மாணவர்களின் உசாவல்கள் அவற்றிற்கான பதில்கள் - வெற்றிதந்தன. அவ்வப்போது, ஆங்கிலம், வரலாறு, குடியியல் போன்ற பாடங்களை S.S.C வகுப்புக்களில் கற்பித்த போதும் நான் ஒரு தமிழ் வாத்தி ஆக்கப்பட்டேன்.

**நல்லாசிரியனாக யாழ். இந்துக் கல்லூரியில் மூன்று தசாப்தங்களுக்குமேல் பணியாற்றியுள்ளீர்கள். அக்காலத்து நீங்கள் கைக்கொண்ட கற்பித்தல் முறையில் தங்களுக்கு வசப்பட்ட தனித்துவ நுட்பங்கள் ஏதாவது உண்டா?**

தொழில் ஆசிரியம் தான் என்று முடிவானால் ஆசிரிய வாண்மையை விருத்தி செய்து கொள்ள வேண்டியது முக்கியம். பாடப்பரப்பில் முழுமையான ஆட்சியும் தெளிவும் வேண்டும்.

பாடப்புத்தகத்தின் அல்லது பகுதியின் எல்லைகளைத் தாண்டிப் பாடத்தைக் கவர்ச்சிகரமாக்கக் கூடிய எடுகோள்களை எடுத்து கூறும் திறமையும், மாணவர்கள் சிறிது சோர்வுற்றிருக்கிறார்கள் என உணர்ந்தால், கதாகாலாட்சேப முறையைக் கையாளுதல் பொருத்தமானது. ஏதோ இந்த மனுசன் எங்களுக்குச் சொல்லித்தர முயல்கிறான் என்ற எண்ணம் மாணவர் மனதில் உதிக்கத் தக்கதாகப் பாடத்தை, தான் கலந்து நடாத்துதல் வேண்டும்.

"இந்த வாத்திக்குத் தெரியுமடா" என்ற கருத்து உதயமாக்-

தொழில் ஆசிரியம் தான் என்று முடிவானால் ஆசிரிய வாண்மையை விருத்தி செய்து கொள்ள வேண்டியது முக்கியம். பாடப்பரப்பில் முழுமையான ஆட்சியும் தெளிவும் வேண்டும்.

பாடப்புத்தகத்தின் அல்லது பகுதியின் எல்லைகளைத் தாண்டிப்பாடத்தைக் கவர்ச்சிகரமாக்கக் கூடிய எடுகோள்களை எடுத்து கூறும் திறமையும், மாணவர்கள் சிறிது சோர்வுற்றிருக்கிறார்கள் என உணர்ந்தால், கதாகாலாட்சேப முறையைக் கையாளுதல் பொருத்தமானது. ஏதோ இந்த மனுசன் எங்களுக்குச் சொல்லித்தர முயல்கிறான் என்ற எண்ணம் மாணவர் மனதில் உதிக்கத் தக்கதாகப் பாடத்தை, தான் கலந்து நடாத்துதல் வேண்டும்.

கப்பட வேண்டும். "Teacher should not be a few pages ahead of the student" இதைப்புரிந்து கொள்ள வேண்டும்.

பாட நூல் கையில் இல்லாமலே பாடம் நடத்தும் முன் ஆயத்தம் அவசியம். கிரமமாக பாடத்தில் மாணவர்கள் முழுமையாக ஈடுபட வைத்தல் அவசியம். இவையே நான் கையாண்ட வழி.

என் தனித்துவம் என்று சொல்லுதல் பொருத்தமன்று. சிலப்பதிகாரத்தில் ஒரு காதை. BA வகுப்பில் பாடம். பேராசிரியர் ஆலாலசுந்தரனார் ஆசிரியர். செட்டியார் ஆகையால் சிலப்பதிகாரத்தில் ஆட்சியோ என்னவோ" மூன்று பாட வேளையில் (3 மணித்தியாலங்கள்) சிலம்பை ஒரு பருத்துக்காட்சியாகக் காட்டினார்.

இரை கண்ட போது பட்சி நிலம் நோக்கி வருவது போலச் சுவையான இடங்களை நின்று காட்டிச் செல்வார். பாடப்பகுதியை தேர்வுக்குப் பயின்ற போதும், நூலை முழுமையாகப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறக்க வழியாயிற்று.

இந்த நெறியைப் பின்பற்றியதே என் வெற்றியும் தோல்வியும்.

**இலங்கையில் பல்வேறுபட்ட கல்விச்சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் நீங்கள் இருந்திருக்கிறீர்கள். இச்சீர்த்திருத்தங்கள் கல்விச் சமூகத்தில் ஏற்படுத்திய சாதக பாதக விளைவுகளைக்கூறுங்கள்?**

சிக்கலான ஆனால் சிந்தனைக்குரிய வினா. நான் கல்வியாளன் அல்ல. ஒரு சாதாரண ஆசிரியன். என் நிலையில் நின்று நோக்குகிறேன்.

அமரர் கன்னங்கராவின் இலவசக்கல்வி, கல்வி வாய்ப்பை வளமற்றவர்கள் என்று அன்று கருதப்பட்டவர்களின் வீட்டு வாசலுக்கே கொண்டு சென்றது. வரலாறு படைத்தது. வரவேற்கப்பட்டது. ஆனால் எதிர்பார்க்கப்பட்ட நற்பயனை முழுமையாகப் பெறவைத்ததா? காரணங்கள் பல.

பாடசாலைக் கட்டணம் இல்லை என்பது மட்டும் மாணவனின் கல்விச் செயற்பாட்டிற்குப் போதுமானதல்ல. வீடு, சூழல், நேரம், வழிகாட்டல், கற்றலில் உதவி என நீளும் வசதிகள் கிடைக்காமை தொய்வுக் காரணங்களாகும். எமது நாட்டின் பொருள் வளம் இலவச வதிவிட வசதிகளுடன் கூடிய பாடசாலைகளை அமைத்துத்தர இடந்தந்திருந்தால் இலங்கை உலகிலேயே கல்வியில் உயர் நிலை பெற்றிருக்கலாம். கல்விச் சீர்திருத்தங்கள் எல்லாமே உயரிய நோக்கோடு தான் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் மாணவர்கள், பெற்றோர்களின் சிந்தனைகள் எல்லாம் நலங்காத, கசங்காத அரச பதவிகளை நாடி நிற்பதால் திட்டங்கள் விரும்பிய வெற்றியைத் தரமுடியவில்லை என்பது என் கருத்து. "கண்ணியமான தொழிலே குடியியல் இலக்கு." "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற சிந்தனை சமுதாய மத்தியில் உருவாக எந்தத்திட்டமும் உதவவில்லை. நான் பெரிசு சிறிது என்ற நிலை எந்தளவும் கல்வித்தரம் உயர்ந்த போதும் மாறவில்லை.

மாணவர்கள், பெற்றோர்களின் சிந்தனைகள் எல்லாம் நலங்காத, கசங்காத அரச பதவிகளை நாடி நிற்பதால் திட்டங்கள் விரும்பிய வெற்றியைத் தரமுடியவில்லை என்பது என் கருத்து. "கண்ணியமான தொழிலே குடியியல் இலக்கு." "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற சிந்தனை சமுதாய மத்தியில் உருவாக எந்தத்திட்டமும் உதவவில்லை. நான் பெரிசு சிறிது என்ற நிலை எந்தளவும் கல்வித்தரம் உயர்ந்த போதும் மாறவில்லை.

வலக்கை உயர்ந்ததா இடக்கை உயர்ந்ததா? விடை சிரிப்புத்தான் கம்பன் கூற்று ஒரு பாடம் சொல்கிறது. "வள்ளல் வில் எடுத்தபோது வஞ்சகன் போருக்கஞ்சி உள்ள நாள் உள்ள மட்டும் உண்டு பின்வாங்கலாமா? இது இடக்கையின் ஆதங்கமான வினா. துள்ளவோ தலைகள் பத்தும் துணிக்கவோ அவன் தன் ஆவிகொள்ளவோ விடவோ? என்று செவியிடை கேட்கலுற்றேன். இது வலக்கையின் அறிவார்ந்த பதில். மக்கள் சிந்தனையில் ஆக்கபூர்வமான மாற்றம் ஏற்படாத போது எந்தத் திட்டமும் வெற்றி பெறவாய்ப்பில்லை. கல்வியாளாளர்கள் திட்டங்களை மிக அருமையாகத் தீட்டித்தருகிறார்கள். இவற்றை நடைமுறைப்படுத்துபவர்கள் கையில் தானே வெற்றி தோல்வி? ஆற்றல் மிக்க அறிவியலாளர்களை எமது நாடு உருவாக்கியுள்ளது. ஆனால் பசுமை நோக்கி ஓடிவிடுகிறார்களே! வீட்டுப் பற்றையும் நாட்டுப்பற்றையும் எமது கல்வித்திட்டங்கள் வளர்க்க வில்லை என்று சொல்வதா? இல்லை திட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்கள் "பெற்றதாயும் பிறந்தபொன் நாடும் ஏற்ற வானின் நனிசிறந்தனவே" என்ற அத்திவாரத்தை இடத்தவறிவிட்டார்களா?

மொத்தத்தில் நாங்கள் மனிதர்களை உருவாக்குவதில் தோற்றுவிட்டோம்.

**நாற்பதுகளின் நடுப்பகுதியிலும் பின்னரும் ஆரம்பிக்கப்பட்ட மத்திய கல்லூரிகள் கிராமப் புற மாணவர்களின் கல்வி விருத்திக்கு எவ்வகையில் உதவின என நினைக்கிறீர்கள்.**

இலவசக்கல்வித்திட்டம் ஈன்றெடுத்த குழந்தைகள் தானே மத்திய கல்லூரிகள் சில சவலைப்பிள்ளைக-

ளாகவும் அமைந்து விட்டமை வருத்தம் தான். ஏலவே சொன்னது போல கல்வியை ஜனரஞ்சக மாக்கிய பெருமை இவைக்குண்டு. புலமைப்பரிப்பெற்றுக் கணிசமான மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். இருந்தும் இவர்கள் பெரிய கல்லூரிகள் என்று கருதப்படும் பாடசாலைகளுக்குப் படை எடுக்கும் படலம் நீள்கிறதே! புலமைப்பரீட்சையில் வெற்றியீட்டித்தந்த ஆசிரியப் பெருமக்கள் என்ன செத்துவிட்டார்களா?

தொடர்ந்தும் அதே பாடசாலைகளில் தம் கல்வியைத் தொடர அங்கு வளங்கள் போதாது இல்லை என்று பெற்றோர் நினைக்கிறார்கள் இதில் உண்மையும் உண்டு.

வளம் குறைந்த பாடசாலைகளை வளமாக்குவது சமூகத்தின் பெருங்கடன். இன்று எமக்குத் தேவை வான் உயர்ந்த கோபுரங்கள் அல்ல.

"வாலறிவன் கற்றான் தொழ நல்லறிவைப் பெறவேண்டிய தெய்வக் குழந்தைகள் வசதியுடன் கல்வி பெற வாய்ப்புள்ள, வளமுள்ள கலைக்கோயில்கள் தான்" இப்படிச் சொல்கிறானே பாவி இவன் ஒரு நாஸ்திகனா? என்ற குரலும் கேட்கலாம். "நடமாடக்கோயில் கம்பத்கொன்தீயில் படமாடக்கோயில் பரமற்கதுவாகுமே" அது என்ற திருமுலரின் முடிந்த முடிவில் அசையாத நம்பிக்கையில் சொல்கிறேன்.

"....அன்ன யாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற பாரதியின் நெஞ்சுருக்கும் சிந்தனையில் உரம் பெற்ற உள்ளத்தோடு சொல்கிறேன். பூசலாரின் புனிதமான கோயிலில் புகுந்து இன்புற்ற பரமன் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன்.

இன்று தேவை வருங்கால சமுதாயத்தை கல்லாற்றுப்படுத்தி வளர்க்க, வளமான கல்வி நிலையங்களே.

தெய்வமென்பதோர் சித்தமின்றி எம் குழந்தைகள் வளர்ந்து விடுவார்களோ! என்ற ஆதங்கம் வாட்டுகிறது.

நல்லாசிரியர்கள் சூழலில் இளசுகள் வளர வாய்ப்பு, ஆசிரியர் இருக்கைளுடன் கூடிய பாடசாலைகள் வேண்டும். அயலே உள்ள ஆசிரியர்களின் சேவையில் வளர்த்த பாடசாலைகள் இன்று வரலாற்று ஏடுகளில் தான் காண முடியும்.

பேருந்தில் வந்திறங்கி பேருந்தில் ஏறி ஓடும் ஆசிரியர்கள் தான் இன்று அதிகம். தவறு அவர்களதல்ல காலத்தின் கோலம் வீட்டு வசதிகள் இவர்களுக்குத் தரப்படுமானால், பாடசாலைச்சமூகம் ஒட்டி உறவாடுமானால், இவ்வாசிரியர்கள் மகிழ்வோடு பாடசாலைகளுடன் ஒன்றிவிடுவார்கள்.

> வளம் குறைந்த பாடசாலைகளை வளமாக்குவது சமூகத்தின் பெருங் கடன். இன்று எமக்குத் தேவை வான் உயர்ந்த கோபுரங்கள் அல்ல.
>
> "வாலறிவன் கற்றான் தொழ நல்லறிவைப் பெறவேண்டிய தெய்வக் குழந்தைகள் வசதியுடன் கல்வி பெற வாய்ப்புள்ள, வளமுள்ள கலைக் கோயில்கள் தான்" இப்படிச் சொல்கிறானே பாவி இவன் ஒரு நாஸ்திகனா? என்ற குரலும் கேட்கலாம். "நடமாடக்கோயில் கம்பத்கொன்தீயில் படமாடக்கோயில் பரமற்கதுவாகுமே" அது என்ற திருமுலரின் முடிந்த முடிவில் அசையாத நம்பிக் கையில் சொல்கிறேன்.

பள்ளியில் மட்டுமல்ல, விளையாட்டுத் திடலிலும் மாணவர்களோடு ஒன்றி உறவாடி நெறிப்படுத்த நிறைய வாய்ப்புக்கள் கிட்டும். மக்கள் மனம் சிந்திக்கவும், செயற்படவும் இறைவனை வேண்டுகின்றேன். என் உள்ளக் குமுறலை கொட்டிவிட்டேன் இன்னும் ஒரு சுனாமியை வரவேற்க யார் தான் ஆயத்தம்?

**தமிழ் ஆசிரியர்களை உருவாக்குவதில் பலாலி, கொழும்புத்துறை, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகள் முக்கிய பணியாற்றி உள்ளன. இக்கலாசாலைகளில் பயின்று வெளிவந்த ஆசிரியர்கள் நாம் மண்ணின் கல்வி வளர்ச்சியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.?**

இப்பட்டியலில் திருநெல்வேலி ஆசிரிய கலா சாலையையும் சேர்த்துக் கொள்வோம். இக்கலாசாலைகள் உருவாக்கித்தந்த ஆசிரிய மணிகள் இப்போது இல்லை என்றாலும் நம் மண்ணில் கல்வி - இன்று நாம் கருதும் கல்விப் பரப்பு வாடிவதங்கியிருக்கும்.

ஒரு சில சகாப்தங்களுக்கு முன் பட்டதாரி ஆசிரியர்கள் எட்டிப்பார்க்கவும் கூசிய மூலை முடுக்குப் பள்ளிகளில், பெரும் இன்னல்களின் மத்தியில், எழுத்தறிவித்த இறைவர்கள் இவர்கள்.

பதமான கழி மண்ணில் அழகும் சால்பும் நிறைந்த "கல்விச்சுடர்களை" ஏற்றிவைத்தவர்கள் இவர்கள்.

உள்ளத்தின் தூய்மையை உடை காட்ட வீடு தோறும் சென்று பள்ளி செல்லச்சிணுங்கிய குஞ்சுகளை தங்கள் அன்புச் செட்டைகளால் அரவணைத்துக் கூட்டிச் சென்று எண்ணும் எழுத்தும் தந்தவர்கள் இவர்களே

இவர்கள் புகாத காடுமில்லை மலையுமில்லை. யாழ்ப்பாணம் சைவ வித்தியா அபிவிருத்திச்சங்கம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் என்ற இரு கல்வி நிறுவனங்களையும் இந்த நாட்டின் கல்வி வளர்ச்சி வரலாற்று ஏடுகளில் தனிப் பெரும் அத்தியாயமாக அமைப்பித் தவர்களும் இவர்களே.

மேற்படி கலாசாலைகளில் அதிபர்களாகவும் பேராசிரியர்களாகவும் பணியாற்றிய பேராசான்களை தெரிந்தவரை நினைவு கூருதல் தெய்வப்பணி.

அதிபர்கள் பொன்னையா, சண்முகரெத்தினம், சவிரிமுத்து, கனகசிங்கம், அமரசிங்கம் செல்லையா, திருமதி ஆனந்தக்குமாரசாமி, S.R. நடராசா, மயிலிட்டி சுவாமிநாதன், பேராசிரியர்கள், கைலாசபதி, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பண்டிதர் கிருஷ்ண பிள்ளை - நினைவில் வந்தவர்கள்.

தொடக்கப்பாடசாலைகளில் தேவைப்பட்ட அத்தனை பாடநெறிகளையும் தயக்கமின்றி வழி நடத்தும் திறமை இவர்கள் தனித்திறன்.

சகல கலா வல்லுனர் எனப் பொருந்தும் இவர்களால் உருவமைக்கப்பட்ட தெய்வச்சிலைகள் தான் கல்லூரிகளில் என்போன்ற ஆசிரியர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டார்கள்

சிலைகளுக்கு மெருகூட்டினோமா, மங்க வைத்தோமா? நெஞ்சில் கைவைத்து நாங்கள் கேட்க வேண்டிய கேள்வி

**மாணவ சமுதாயத்தை வழிப்படுத்திலும் — தம் சமூகச் செயற்பாடுகள் மூலம் தலைமைப் பண்பை வெளிப்படுத்தியதிலும் முதன்மை பெற்ற ஆசிரியர்கள் என யார் யாரை நீங்கள் கருதுகிறீர்கள்.**

இதென்னையா பொல்லாத கேள்வி கேட்கிறீர்கள்!

எம்மிடமுள்ள வாசிதுடைத்து ஒதளி விடச் செய்து, ஆசிலாத சமுதாயத்தை உருவாக்க ஒரு பரம்பரையை படைத்துத் தருபவர்கள் தானே ஆசிரியர்கள். அதனால் தானே இன்றும்! "வாத்தி வ்ருகுதெடா" என்று அல்திணையில் வைத்து நினைத்தாலும் மரியாதை பெறுகிறோம்.

இப்பெருமக்கள் பெயர்களைப் பட்டியல் செய்ய நான் யார்? என்ன அதிகாரம்?

**இன்றைய பெரும் பாலான ஆசிரியர்களிடத்து இத்தகைய பண்புகள் அருகி வருவதற்கான காரணங்கள் என்ன?**

அதற்குக் காரணங்கள் உண்டு. பாடசாலையில் நான் முக்கியமா? என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சிறுசுகள் முக்கியமா?

என் பதவி முக்கியமா? என் கடமை முக்கியமா?

யாருக்காவது பயந்து நான் என் கடமையைச் செய்ய வேண்டுமா? யாரை நம்பி என் முன் 35,40 உயிர்கள் அமர்ந்திருக்கின்றன?

நான் ஆசிரியனா, வியாபாரியா?

என் முன் அமர்ந்திருப்பவர்கள் வருங்காலச் சிற்பிகளா, மண்ணில் மறையும்சிப்பிகளா? இவ்வினாக்களை அடிக்கடி எம்மையே நாம் கேட்டுக் கொள்வோம். பண்பு அருகாது பெருகும். யாரோ ஒரு கல்வியாளன் சொன்ன நினைவு

**உங்களால் உருவாக்கப்பட்ட நினைவில் நிற்கும் முதன்மை மாணவர்கள் பற்றிக் கூறுங்கள்.**

நான் உருவாக்கினேனா? அவர்கள் உருவானார்கள். நான் துணை நின்றேன் அணை கட்ட உதவிய அணில் என்பார்களே அது போல். என் மாணவர்கள் துணை வேந்தர்களாக, பேராசிரியர்களாக, விரிவுரையாளராக, நல்லாசியர்களாக மருத்துவ நிபுணர்களாக எத்திரியர்களாக உலக நாடுகள் எல்லாம் பரந்து வாழ்கிறார்கள்.

எல்லோரும் அவ்வக்காலங்களில் முதன்மை மாணவர்களே.

இருந்தும் ஆசியன் வணக்கத்துக்கு உரியவன் என்ற என் தனிப்பட்ட முடிவுக்கு வடிவம் கொடுத்த முதன் மாணவன் அ. வேற்பிள்ளை - இன்று இலண்டனில் அறுவை வைத்திய நிபுணர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயிலத் தெரிவு செய்யப்பட்டு, யாழ் இந்துவிலிருந்து விடைபெறும் போது, நான் பாடம் நடத்திக் கொண்டிருந்த வகுப்பறைக்கு வந்து, தனக்கு அகில இலங்கை சைவசமயப் பரீட்சையில் முதலிடம் பெற்றபோது, பரிசளிக்கப்பட்ட திருமுருகாற்றுப்படை உரை நூலைத்தந்து என் கால்களைத் தொட்டு வணங்கி விடைபெற்ற நிகழ்வையும் - நான் எதிர்பார்க்காமல் நிகழ்ந்த நிகழ்வு - என்னை மறந்து, சூழலை மறந்து அவரை கட்டித்தழுவி, ஆனந்தக் கண்ணீர் விட்டு விடை கொடுத்ததையும் இவன் சாதனை படைத்துக் கல்லூரிக்கும் பெருமை தரவேண்டும் என்று இறைவனை வேண்டியதையும் வகுப்பில் இருந்த (எட்டாம் வகுப்பு) மாணவர் அத்தனைபேரும் சிலைகளானதையும் நான் மறந்ததில்லை. இந்த ஞான பரம்பரை நீண்டு கம்பவாரிதி இ. ஜெயராசா வரை வளர்ந்தது.

பெருமை கொள்ளலாம் தானே? என் மனக் கருத்தை உருக்கொடுத்து ஒளி விடப்பாடுபடும் கம்பன் கழக மரகதத் தூண்கள் அத்தனை பேரும் என் முதன்மை மாணவர்களே நான் என்றும் அவர்கள் அன்புக்கு அடிமை அது எனக்குப் பெருமை.

**ஆசிரியப் பணி உங்களுக்குப் பூரண திருப்தியைத் தந்துள்ளதா?**

மகாதிருப்தியைத் தந்துள்ளது. என்று நான் "ஆசிரியன் தான்" என்று முடிவு செய்து கொண்டேனோ அன்றிருந்தே ஆசிரியத் தொழிலை தெய்வத்தொண்டு என்று நினைத்து தொழிற்பட்டேன்.

நன் மாணாக்கர்களை பெற்றேன். மாணவர்களா? எடுத்துச்சுமப்பவர்கள் அவர்களே தான். ❑

# பிரசவ விடுமுறை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் III

பெண் அரச அலுவலர்களுக்கு ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்குமாக 84 நாள்கள் சம்பளத்துடனான பிரசவ விடுமுறையும், 84 நாள்கள் அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறையும், 84 நாள்கள் சம்பளமற்ற பிரசவ விடுமுறையும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் 18 ஆம் பிரிவுக்குப் பதிலாக பின்வரும் பிரிவு 2005.01.01 திகதி முதல் நடைமுறைப்படும் வண்ணம் பதிலீடு செய்யப்படுகிறது.

## 18. பிரசவ விடுமுறைகள்

18.1 நிரந்தர, தற்காலிக, அமய, அல்லது பயிலுநர் பெண் அலுவலர்கள் இப்பிரிவின் கீழ் பிரசவ விடுமுறை பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவர்.

**18.2 சம்பளத்துடனான பிரசவ விடுமுறைகள்**

18.2.1 பெண் அலுவலரொருவருக்கு உயிர்வாழும் ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்குமாக முழுச் சம்பளத்துடனான அரசாங்க வேலையாற்று 84 நாள்கள் விடுமுறை பெறுவதற்கு உரித்துண்டு. பிரசவம் நிகழ்ந்து 04 வாரங்கள் செல்ல முன் அலுவலர் மீண்டும் கடமையை பொறுப்பேற்க அனுமதிக்கப்படமாட்டார். இப்பிரிவின் கீழ் விடுமுறை பெறுவதற்காக ஒரு வைத்தியச் சான்றிதழையோ அல்லது குழந்தையின் பிறப்புச் சான்றிதழையோ சமர்ப்பிக்க வேண்டும்.

18.2.2. பிரசவ விடுமுறைகளை கணிப்பீடு செய்யும் போது அந்த விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்கலாகாது.

18.2.3 இவ் விடுமுறைக் காலத்தை அலுவலரின் மீதி விடுமுறைகளிலிருந்து கழித்தல் ஆகாது என்பதுடன், இவ் விடுமுறைக் காலத்தை முழுச் சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருத வேண்டும்.

18.2.4. பிறக்கும் போதே மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளைப் பிறப்பிலும் பிரசவத்திலிருந்து 6 வாரங்கள் செல்லமுன் குழந்தை மரணிக்கின்ற சந்தர்ப்பத்திலும் குழந்தையின் மரணச் சான்றிதழை அல்லது வைத்தியச் சான்றிதழை சமர்ப்பித்த போது விசேட சம்பளத்துடனான விடுமுறையாக பிள்ளைப் பிறப்பு நிகழ்ந்த திகதி முதல் 6 வார கால விடுமுறை வழங்க வேண்டும்.

**18.3 அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறை**

18.3.1. மேற்போந்த 18.2.1. ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்படி விடுமுறை பெற்றுக் கொண்ட பின் குழந்தையை பாதுகாத்துக் கொள்வதற்காக அரைச் சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறை பெற உரித்துண்டு.

18.3.2. அரைச் சம்பளத்துடனான விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தினங்களை அரைச் சம்பள விடுமுறைகளாகக் கருத வேண்டும்.

**18.4 சம்பளமற்ற பிரசவ விடுமுறைகள்**

18.4.1 மேற்போந்த 18.3.1. உட்பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகள் முடிந்த பின் மேலும் குழந்தையை பாதுகாக்கும் அவசியம் ஏற்படும் போது மட்டும் சம்பளமற்ற 84 நாள் விடுமுறை வழங்கலாம்.

18.4.2 இப் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற விடுமுறைகளை கணிப்பீடு செய்யும் போது அந்த விடுமுறைக் காலத்திற்குள் வரும் அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்க வேண்டும்.

18.4.3. இந்த விடுமுறைகளை வழங்க முன் அலுவலருக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன்களின் அல்லது முற்பணங்களின் மாத தவணைக் கட்டணங்களை தொடர்ந்து அறவிடுவதற்காக திருப்திகரமான ஓர்

ஒழுங்கைச் செய்வது திணைக்களத் தலைவரின் பொறுப்பாகும்.

18.5. கருச்சிதைவுக்காக (Abortion & Miscarriage) விடுமுறை அவசியப்படுமாயின் வைத்தியச் சான்றிதழின் பேரில் அலுவலருக்கு உரித்தான ஓய்வு விடுமுறைகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

18.6. 18.2.1 உட்பிரிவின் கீழ் பெற்றுக்கொண்ட விடுமுறைக் காலம் முடிவடைந்த பின் 18.3.1 ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளை பெறாவிட்டால் தனது குழந்தைக்கு தாய்ப்பாலூட்டுவதற்காக வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் சேவை நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். இவ் அனுமதி வழங்கப்பட வேண்டியது குழந்தையின் வயது 6 (ஆறு) மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டுமாகும்.

18.7 மேலும் பெண் அரச அலுவலரொருவர் கர்ப்பமுற்றிருக்கும் காலம் 5 மாதங்கள் ஆகும் போது கடமைக்காக அரை மணித்தியாலம் தாமதமாகி சேவை நிலையத்திற்கு வருகை தரவும், வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு அரை மணித்தியாலத்திற்கு முன் புறப்படவும் அனுமதி வழங்கப்படுகிறது இச் சலுகை வழங்கப்படுவது அலுவலர் பிரசவ விடுமுறை பெறும்வரை மட்டுமாகும்.

18.8 மேற்போந்த 18.31, 18.4.1 பிரிவுகளின் கீழ் குறிப்பிட்டுள்ள விடுமுறைகள் அங்கீகரிக்கப்படுவது குழந்தை உயிர் வாழும் போது மட்டுமாகும். விடுமுறை பெற்றுக்கொள்வது குழந்தையை பாதுகாப்பதற்கானதால் ஏதேனும் காரணமாக குழந்தை மரணித்துவிட்டால் அத்திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு பின் இவ் விடுமுறைகள் செல்லுபடி அற்றதாகும்.

18.9. மேற்போந்த 18.3.1, 18.4.1. பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் விடுமுறைகள் சம்பள ஏற்றங்களுக்கும் ஓய்வூதிய அலுவல்களுக்கும் தடையாக அமைதல் ஆகாது சம்பளமற்ற விடுமுறைக் காலத்திற்குள் ஏற்படும் வெற்றிடங்களின் போதும் பதவி உயர்வுகளின் போதும் இந்த விடுமுறைக் காலத்தை தடையாக கருதலாகாது

18.10. அலுவலர் மேற்போந்த 18.3.1, 18.4.1 பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளில் ஒரு பகுதியை இரத்துச் செய்து சேவைக்குச் சமூகமளிக்க விரும்பினால் திணைக்களத் தலைவருக்கு அறிவித்து அவ்வாறு செய்யலாம்.

02. இந்தச் சுற்றறிக்கை நடைமுறைக்கு வரும் திகதியன்று அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2004 இன் ஏற்பாடுகளின்படி பெற்றுள்ள சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறையை கடந்து செல்லாத அலுவலர்கள் மட்டும் மேற்போந்த 18.3.1. ஆம் 18.4.1. ஆம் உட்பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ளலாம் 2005.01.01 ஆம் திகதியன்று சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறையைக் கடந்திருக்கும் அலுவலர்கள் இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அரைச் சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைச் சிறப்புரிமை பெற உரித்துடையவர்கள் ஆகார்.

உதாரணம்:

2004.12.15 ஆம் திகதியன்று அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 03 / 2004 இன் ஏற்பாடுகளின்படி சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறைகளை முடிவுறுத்தி உள்ள அலுவலர்களுக்கு இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அரைச் சம்பள, சம்பளமற்ற விடுமுறைகளை வழங்க முடியாது.

03. 2005.01.01 ஆம் திகதி முதல், 1999.07.20 திகதி 16/99 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையும், 2004.08.18 ஆம் திகதிய 03/2004 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையும், தற்போது மேற்கொண்டுள்ள செயல் முறைகளை பாதிக்காதவாறு இரத்துச் செய்யப்படுகின்றது.

**ஆங்கில வழிப்பள்ளிக்கூடங்களில் தானே ஒழுங்கு, சுகாதாரம் எல்லாம் இருக்கின்றன?**

இது தான் வேடிக்கையான நம்பிக்கை, பிள்ளைகளின் ஒழுங்குக்கும் அவர்கள் படிக்கிற மொழிக்கும் எந்த வகையிலும் சம்பந்தமில்லை. அமெரிக்காவிலே பள்ளிக்கூடத்திற்கு மாணவர்கள் துப்பாக்கி எடுத்துச் சொல்கிறார்களே! இதைத் தடுப்பதுவே அந்த நாட்டின் தேர்தல் பிரச்சாரமாகவும் சொல்லப்படுகிறதே! இதற்காக ஆங்கில மொழியை "ஒழுக்கம் கெட்ட மொழி" என்று ஒட்டு மொத்தமாகச் சொல்லி விட முடியுமா? ஒழுங்கு என்பதும் ஒழுக்கம் என்பதும் பெற்றோர் வளர்ப்பிலும் சமுதாயச் சூழ்நிலையாலும் உண்டாகும். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே" படிக்கின்ற மொழியால் அது இல்லை. அது போலவே கழுத்திலே மாட்டுகிற "டை" காலில் மாட்டுகிற "ஷு", முதுகில் சுமக்கிற "பேக்" - இவற்றால் மட்டுமே ஒழுங்கும், ஒழுக்கமும் வந்து விடாது என்பதையும் நாம் உணர வேண்டும்.

*(ஏன் வேண்டும் தமிழ் வழிக்கல்வி எனும் சிறு பிரசுரத்திலிருந்து)*

# கடிதம்

ஒவ்வொரு இதழ்களும் தரமாகத் தான் உள்ளது. அதை விட ஒவ்வொரு மாதமும் இதழ் தவறாது வந்து விடுவது மகிழ்ச்சிக்குரியது. ஆசிரியர்களின் உயர் தொழில் சிறப்புக்கும் மேன்மைக்கும் விருத்திக்கும் "அகவிழி" நிச்சயம் உதவும். ஆனால் அந்தளவிற்கு ஆசிரியர்களில் அகவிழி தாக்கம் செலுத்துகிறதா? என்பது ஓர் அடிப்படைக் கேள்வியாகவே உள்ளது.

நான் அறிந்தவகையில் இன்னும் பல ஆசிரியர்கள் "அகவிழி" என்ற இதழ் வெளிவரும் தகவல் கூட தெரியாதவர்களாக்வே உள்ளார்கள். ஒரு விதத்தில் மந்த புத்தியுள்ளவர்களாக ஆசிரியர்கள் உள்ளார்கள். இது கவலை அளிக்கிறது. இத்தகைய ஆசிரியர் குழாமில் தாக்கம் விளைவிக்கும் இதழாக அகவிழி மாற வேண்டும். ஆகவே அகவிழி ஒவ்வொரு ஆசிரியர்களது கைகளை வந்தடையக்கூடிய வழிமுறைகள் குறித்து சிந்திப்பதும் செயற்படுத்துவதும் தான் தற்போதைய தேவை.

இன்னொரு விடயத்தையும் கூறவிரும்புகிறேன். கட்டுரைகள் சிலவற்றில் விடயத்தெளிவு போதாமல் உள்ளது. பொதுவாக "நோட்ஸ் கல்ச்சர்" என்ற வகையில் இருந்து விடுபட்டு அறிவுருவாக்கப் பண்பு, தேடல் சார்ந்து எழுதப்படும் பண்புகள் குறைவாக உள்ளது. நாம் கற்பதில் இருந்து புதியதை உருவாக்கவும், இருப்பவற்றை கேள்வி கேட்கவும், விமரிசனம் செய்யவும் முயற்சி செய்யவேண்டும். அதற்கான துணிவும் நேர்மையும் வேண்டும். கட்டுரைகளில் இவை வெளிப்படவேண்டும்.

நடைமுறை அனுபவம், சிக்கல்கள், பொருத்தப்பாடின்மைகள் ஆகியவற்றை உரசிப்பார்க்கும் வகையில் கட்டுரைகள் எழுதப்படவேண்டும். இல்லை. "ஆசிரியர் கல்வி" பற்றியும் அதன் எதிர்கால மேம்பாடு பற்றியும் பலர் எழுதினாலும் நடைமுறையில் ஆசிரியர் கல்வியின் இலட்சண முறைமை இன்றும் மாற்றம் பெறாமல் தான் உள்ளது. இதற்கு யார் பொறுப்பு?

இன்று ஆசிரிய கல்வியியலாளர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் ஆசிரியர் கல்வியின் விளைதிறன் மிகு மாற்றத்துக்கு என்ன செய்கிறார்கள். இவர்கள் பங்கு கொள்ளும் வகுப்புகளே இதனை விளக்கும். பொதுவாக கல்வியியல் வகுப்புகள் பலவற்றுக்கு திட்டமிடல் போதாது. வெறும் ஒப்பேற்றல் மட்டும் தான் உள்ளது. இது பற்றி மாணவர்களிடம் கலந்து பேசினால் "சீர்திருத்தப்பட வேண்டிய பணிகள்" எங்கு என்பது புலனாகும்.

நான் யாரையும் குறை சொல்லும் நோக்கில் கூறவில்லை. ஆனால் பலருக்கு எழுத்து வேறு நடைமுறைவேறு. இதுவே ஆசிரியர் கல்வி தரம் குறைந்து காணப்படுவதற்குப் பிரதான காரணம்.

அகவிழி கல்வியியல் படிப்பு சார்ந்த ஓர் கள ஆய்வுப் பணியில் ஈடுபட்டால் "நாம் எங்கு உள்ளோம்" என்பது தெளிவாகும் அகவிழி இதனை மேற்கொள்ள வேண்டும்.

சா. சுதாகரன்
ஆசிரியர்
யாழ்ப்பாணம்.

அகவிழி 8 வரையிலான இதழ்களை தொடர்ந்து வாசித்து வருகின்றேன் இதழ்கள் முழுவதிலும் ஆண்களே தொடர்ந்து எழுதி வந்துள்ளார்கள். ஏன்? பெண்கள் மத்தியில் எழுதக் கூடியவர்கள் ஏன் இல்லையா? அல்லது எழுதக் கூடியவர்களை இனம் கண்டு அவர்கள் எழுத்துகளை வாங்கிப் பிரசுரிக்க முடியாதளவிற்கு அகவிழி தயாராக இல்லையா?

இன்று தமிழ் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பாலானோர் பெண்கள். ஆகவே "ஆசிரியர் கல்வி" பற்றிய சிந்தனையிலும் ஆராய்ச்சியிலும் பெண்கள் மையப்படுத்தப்பட்ட பார்வை விரிவு பெற வேண்டும். ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்று பார்க்கும் பொழுது கூட ஆண்நோக்குத்தான் மேவி உள்ளது. நமக்காகவும் ஆண்கள் தான் உள்ளார்கள். நமக்காக சிந்திக்கக்கூடிய நம்மவர்கள் - பெண்கள் - வேண்டும். அப்பொழுது தான் பிரச்சினைகள் வேறுவிதமாகப் புரிந்து கொள்ளப்படும். அகவிழி பெண்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

தயவு செய்து பெண் ஆசிரியர்களைக் கருத்தில் கொண்டு பெண்களால் எழுதப்படும் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இ. சாவித்திரி
ஆசிரியர்
திருமலை